பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 07 திங்கட்கிழமை 20.04.2020 கதிர் 166

இனி இது ரகசியம் அல்ல!

இன்றைய நெருக்கடி காலகட்டத்தில் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்.மாவட்டக்கிளையும் அளப்பரிய பணி ஆற்றுகின்றது. மருத்துவத்துறையில் ஏனையோரின் பணிச் சிறப்புக்கு கொஞ்சமும் குறைந்தது அல்ல அது. பக்கம் 02

## சமூக இடைவெளியை கட்டாயம் பேணுங்கள்

### யாழ். அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 20

நீண்ட நாள்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் நிலையில் சமூக இடைவெளியைப்பின்பற்றி சுகாதாரப் பிரிவின் அறிவுறுத்லுக்கமைய பொதுமக்கள் தமது அன்றாட செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்.

– இவ்வாறு தெரிவித்துள்ள யாழ்.மாவட்ட அரச அதிபர் த.மகேசன், பொது மக்கள் ஒவ்வொருவரும் தமது கடமைகளை உணர்ந்து பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டுமென்றும் கேட்டுள்ளார். பக்கம் 02

## பொருளாதாரத்தை மீளக்கட்டி எழுப்பவே ஊரடங்கு தளர்வு என்கிறார் கோட்டாபய

கொழும்பு,ஏப்.20

நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவை தளர்த்துவதற்கான நோக்கம் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கே என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து, தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வெளியிட்டுள்ள பதிவில், நாட்டு மக்கள் சுகாதார வழிகாட்டல்களை கடைபிடிப்பது மற்றும் சமூக பாதுகாப்பிற்காக பொறுப்புடன் செயற்படுவதும் கட்டயமாகுமென தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பக்கம் 02



# இன்னும் ஒரு வார காலமாவது யாழில் ஊரடங்கை நீடியுங்கள்!



## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்டக் கிளை மன்றாட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்.20

யாழ். மாவட்டத்தில் மேலும் குறைந்தது 7 நாள்களுக்கு ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாணம் மாவட்டக் கிளை வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பான எழுத்துமூலக் கோரிக்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளருக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என அதன் வட மாகாண இணைப்பாளர் மருத்துவர் த.காண்டீபன் தெரிவித்துள்ளார். பக்கம் 02

## இன்றுடன் நிறுத்தப்படுகிறது 5,000 ரூபா நிதி நிவாரணம்

யாழ்ப்பாணம், ஏப்.21

கொரோனா காரணமாக அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தையடுத்து மிகவும் பாதிப்படைந்த குடும்பங்களை இனங்கண்டு, அந்தக் குடும்பங்களுக்குத்தலா 5,000 ரூபா வழங்கிய செயற்பாடு, இன்றுடன் நிறைவு செய்யப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைய, இது தொடர்பாக தனது அலுவலகத்தில் கலந்துரையாடலொன்று முன்னெடுக்கப்பட்டதாகவும் இதன்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இந்நிலையில், இதுவரைக்கும் 416,764 சிரேஷ்டப் பிரஜைகள் உள்ளிட்ட 1.4 மில்லியன் குடும்பங்களுக்கும்விசேடதேவையுடைய 84,071பேருக்கும், நாள் பட்ட சிறுநீரக பக்கம் 02

## தேர்தல் ஆணைக்குழுவின் தீர்மானப்படி நடப்போம்!

### பிரதமர் மஹிந்த அறிவிப்பு



கொழும்பு, ஏப். 20

தேர்தல்சட்டத்தைமீறிச்செயற்பட முடியாதென்பதால் தேர்தல் ஆணைக்குழு எடுக்கும் தீர்மானத்துக்கு அமைய அரசு செயற்படுமென்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து பக்கம் 02

## மற்றொரு கர்ப்பிணிக்கு கொரோனாத் தொற்று

கொரோனாத் தொற்றுடையவர்கள் என நேற்று இனங்காணப்பட்டவர்களில், கொழும்பு காசல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பக்கம் 02

## மக்களே அவதானம்!

### அனில் ஜாசிங்க எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 20

கொரோனா தொற்றுடைய நபர்களுடன் நெருங்கிப் பழகிய 15 பேர் நேற்று வைரஸ் தொற்றாளர்களாக பக்கம் 02

## கொரோனாத் தடுப்பை கைவிட்டது அரசாங்கம்

### ஜே.வி.பியின் பிமல் ரத்னாயக்கா காட்டம்



கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக, கடந்த ஒரு மாதமாக முன்னெடுத்த நடவடிக்கைகளை, சனிக்கிழமையுடன் அரசாங்கம் கைவிட்டுள்ளதென, தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினரான ஜே.வி.பி. பிரமுகர் பிமல் ரத்னாயக்க குற்றஞ் சாட்டினார்.

கொழும்பில் பக்கம் 02

## நேற்று மட்டும் 17 பேருக்குக் கொரோனா நோயாளர் எண்ணிக்கை 272 ஆக உயர்வு

### கொழும்பு வாழைத்தோட்டத்தில் ஒரு பெண்ணால் 26 பேர் பாதிப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ்தொற்றுக்குள்ளாகியவர்களின் மொத்த எண்ணிக்கை 271 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று மாத்திரம் 17 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கொழும்பு, வாழைத்தோட்டத்தில் கொரோனா தொற்றுக்குள்ளான பெண் ஒருவருடன் பழகிய நிலையில்தனிமைப்படுத்தப்பட்டிருந்த 17 பேருக்கு வைரஸ் தொற்று இருப்பது இன்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து வாழைத்தோட்டத்தில் அந்தப் பெண் உள்ளிட்ட 27பேர் கொரோனா தொற்றால் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளனர். அந்தப் பெண்ணாலே அவரின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் பக்கம் 02

காலைக்கதிர் Kalaikkathir



## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தரப்பின் மனம் நெருடும் என்பதால் – அதுவும் இந்த நெருக்கடி சமயத்தில் அப்படியான நெருடல்களை ஏற்படுத்துவது பொருத்தமல்ல என்பதால் – விவரத்தை இறுக்கமாகவும், சுருக்கமாகவும் குறிப்பால் உணர்த்தி முடிக்கின்றேன்.

*“அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மற்றும் இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் என்பன இணைந்து வெளியிட்டுள்ள கொரோனா ஒழிப்புத் தொடர்பான பரிந்துரை அறிக்கையில் முஸ்லிம் சமூகத்தினரை கொரோனா காவிகளாக இழிவுபடுத்தி பழி சுமத்தப் பட்டிருப்பது மிகவும் கண்டிக்கத்தக்க ஈனச் செயலாகும்.”* – என்று கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் விசனம் தெரிவித்து நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றார்.

*“கொரோனா வைரஸ் பரவலுடன் முஸ்லிம் சமூகத்தைத் தொடர்புபடுத்தி, புலமைசார் அமைப்பின் சார்பில் இவ்வாறு இனத்துவ ரீதியில் அறிக்கை வெளியிட்டிருப்பதை முஸ்லிம்கள் மாத்திரமல்லாமல் யதார்த்தத்தைப் புரிந்து கொள்கின்ற பிற மதங்களைச் சேர்ந்த புத்திஜீவிகள் கூட ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்”* – என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்படி அறிக்கையுடன் சம்பந்தப்பட்டுள்ள இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான கலாநிதி சஞ்சீவ வீரரத்ன, அந்த அறிக்கையை நிராகரித்து, கண்டனம் வெளியிட்டுள்ளமையுடன் இதனால் கவலையடைந்துள்ள முஸ்லிம் சமூகத்தினருக்கான மனம் வருந்துகிறார் எனக் குறிப்பிட்டு மறுப்பறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருக்கின்றார்.

விடயம் அதுமட்டுமல்ல. அதற்கு அப்பாலும் உண்டு.

பலாலி தனிமைப்படுத்தல் முகாம் தொற்றுப் பரவலுக்கான மையமா என்ற சந்தேகத்தைக் கிளப்பி, எமது நாளிதழே ஓர் ஆசிரிய தலையங்கத்தை எழுதியிருந்தது. அந்தக் கேள்வி நம்முடையது மட்டுமல்ல. இப்பிரதேச புத்திஜீவிகளின் சந்தேகமும் அதுவே என்று குறிப்பிட்டிருந்தோம்.

அந்தச் சந்தேகம் உரிய – நியாயமான – முறைகளில் இன்னும் தீர்க்கப்படவில்லை. சரியான – பக்கச் சார்பற்ற – நீதி, நியாயமான – விசாரணைகள் இவ்விடயத்தை ஒட்டி நடந்ததாகவும் தகவல் இல்லை. இனி நடக்கும் என்று நம்புவதற்கும் இடமில்லை.

வடக்கு (தமிழ்) மருத்துவ, சுகாதார அதிகாரிகள் எல்லாம் பலாலி தனிமைப்படுத்தல் மையத்தை ஒருவாறு தாஜா செய்து சரி பண்ணும் ‘சமாளிபிக்கேஷன்’ (தமிழும் இங்கிலிஷும் கலந்த ஒரு புனைவுச் சொல். அதனால் இதனை ‘தங்கிலிஷ்’ என்று சொல்லலாமா?) அறிவிப்புக்களை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் பதவி நிலையில் அதைத்தான் அவர்கள் செய்ய முடியும். அதுவும் புரிந்து கொள்ளத்தக்கதே.

ஆனால் பலாலி தனிமைப்படுத்தல் மையம் தொடர்பாக எம்மைப் போல அதே சந்தேகத்தை எழுப்பிய வட பகுதியில் முக்கிய மருத்துவர் ஒருவருக்கு எதிராகக் கெம்பி எழுந்திருக்கின்றது மருத்துவ அதிகாரிகள் சங்கம்.

இது தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அவசரமாக சங்கத்தின் செயலாளர் எழுதிய கடிதத்தில் அந்தத் தமிழ் டாக்டருக்கு எதிராக விரைந்து விசாரணை, ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தின்படி காரணம் இரண்டு தான். ஒன்று – அந்த தமிழ் டாக்டர் எழுப்பிய சந்தேகக் குற்றச்சாட்டு பலாலி இராணுவத்துக்கு எதிரானது. அடுத்தது – அதை எழுப்பிய தமிழ் டாக்டரின் பழைய சரித்திரத்தின்படி அவர் சர்ச்சைக்குரியவர், அத்தோடு இனவாதியாம்.

இதுதான் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எழுத்தில் வைத்திருக்கும் குற்றச்சாட்டு.

இதை அறிந்த போது எனக்கு ஒரேயொரு விடயம்தான் மனதில் தோன்றியது. அதை வடக்கு தமிழ் மருத்துவர்களுக்கும் நமது தமிழ்ப் பொதுமக்களுக்கும் ஒரு தடவை நினைவூட்டி வைக்கலாம் என்று மனதில்பட்டது.

இன்று எங்களால் மருத்துவ உத்தமராகப் போற்றப்படும் – ஏன் பலரால் மருத்துவ தெய்வமாக மதிக்கப்படும் – யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தியை ஓய்வுகாலம் வரை அப்பதவிக்கான நிரந்தர அதிகாரியாக சுகாதார அமைச்சே நியமித்து கௌரவித்துள்ளது. அந்த கௌரவத்துக்கு முழுத் தகுதியுள்ளவர் அவர்.

தப்பித் தவறி அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக் கடிதம் ஒன்றை இதே மருத்துவ அதிகாரிகள் சங்கம் எழுதவேண்டி வந்தால் –

யுத்த காலத்தில் தமிழ் மக்களுக்கு தமது உயிரைத் துச்சமாக மதித்து மருத்துவர் சத்தியமூர்த்தி ஆற்றிய பணியை கவனத்தில் எடுத்து அவரை ‘கடந்த காலப் பயங்கரவாதி’ என்றுதான் விமர்சிக்கும்.

சிறுபான்மையினரை – தமிழர்களையும், முஸ்லிம்களையும் – எப்போதுமே கொச்சைப்படுத்தும் பேரினவாத மேலாண்மைத் திமிரில் இருக்கும் இதுபோன்ற தென்னிலங்கைச் சங்கங்களுக்கு நாம் தொடர்ந்து அடி பணிந்து செயற்பட வேண்டுமா?

மெத்தப்படித்தவர்கள் மருத்துவர்கள். அவர்களுக்கு ஆலோசனை என்று கூட எதையும் குறிப்பிடும் தகுதி நிலை எமக்கிருப்பதாக அவர்கள் கருதமாட்டார்கள். அதனால் கேள்வியுடன் நிறுத்திக் கொள்கின்றேன். இது ஆலோசனை அல்ல.

(பிற்குறிப்பு:– தயது செய்து மருத்து–வர்களின் குழு சர்ச்சைக்குள் என்னை ஓர் அணியாகச் சேர்த்துக் கொண்டுவிடாதீர்கள். ஏனெனில் இதில் நான் எந்தப் பக்கமும் இல்லை. எல்லோர் பக்கமுமே.)

–மின்னல்–

## இன்னும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் விதிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு இன்று திங்கட்கிழமை அதிகாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை தளர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் நாங்கள் அவசர சந்திப்பு ஒன்றை இன்று (நேற்று) நடத்தியிருந்தோம். ஆதார வைத்தியசாலை பருத்தித்துறையின் கிளை, தெல்லிப்பளைப் புற்றுநோய் வைத்தியசாலையின் கிளை, யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவின் கிளை மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலையின் கிளை ஆகியவற்றின் கிளைச் சங்கங்களின் மருத்துவர்கள் பங்கேற்றனர்.

குறுகிய அறிவிப்புடன் ஊரடங்கு உத்தரவை நீக்குவதற்கான இந்த முடிவானது வடக்கு மாகாணத்தின் சுகாதார மருத்துவ அதிகாரிகளின் வலுவான பரிந்துரைகளுக்கு எதிராக எடுக்கப்பட்டது என்பதை நாங்கள் அறிந்து கொண்டோம்.

16 தொற்று நோயாளர்கள், மதபோதகருடன் இருந்து கொரோனா தொற்றிக்குள்ளாகியமையும், அவருடன் நெருங்கிய தொடர்புகள் கொண்ட 329 பேர்களில் 80க்கு மேற்பட்டோர் இன்னமும் பரிசோதனைக்கு உட்படாமலும் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெளிநாட்டிலிருந்து வந்த ஆயிரத்து 200 க்கும் மேற்பட்டவர்கள் பரிசோதனைக்கு உட்படாமலும் இருப்பதால், வடக்கு மாகாண சுகாதார அதிகாரிகள் ஏப்ரல் 27 க்குப் பிறகு மட்டுமே ஊரடங்கு உத்தரவை நீக்கப் பரிந்துரைத்துள்ளனர்.

இந்தக் காலகட்டத்தில் பரிசோதனைகளை ஆகக் குறைந்தது இந்த நெருங்கிய தொடர்புகளுடன் செய்வதன் மூலம் யாழ்ப்பாணத்தின் சமூகத் தொற்று நிலை சம்பந்தமான வெளிப்பாடு மேம்படும்.

குறுகிய அறிவிப்புடன் ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்ட பின்னர், பொது மக்கள் பல்வேறு வியாதிகளுக்கு மருத்துவமனைகளுக்கு வருவார்கள். மேலும் கோவிட் – 19 இக் கான குறைந்தபட்ச தடுப்பு நடவடிக்கைகளுடன் மக்களின் தேவைகளை நிறைவு செய்ய எல்லா மருத்துவமனைகள் இன்னமும் தயார் நிலையில் இல்லை.

எனவே, நெருங்கிய தொடர்புகளின் பரிசோதனைகளை நிறைவு செய்வதற்கும், மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களில் உள்ள சுகாதார ஊழியர்களின் தனிப்பட்ட பாதுகாப்பிற்கான வசதிகளை மேம்படுத்துவதற்கும் ஊரடங்கு உத்தரவை குறைந்தது 7 நாள்களுக்கு நீட்டிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம் – என்றார்.

## நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அயலவர்களுக்குக் கொரோனா வைரஸ் பரவியுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, வாழைத்தோட்டம், பண்டார நாயக்க வீதியைச் சேர்ந்த 59 வயதான பெண் ஒருவர் கடந்த 15ஆம் திகதி கொரோனாவைரஸ்தொற்றுடன்அடையாளம் காணப்பட்டார். அவர் கடந்த பெப்ரவரி 29 ஆம் திகதி தனது, கணவர் மற்றும் மூத்த புதல்வருடன் தம்பதிவ யாத்திரைக்கு நுகேகொடையிலுள்ள முகவர் ஒன்றின் மூலம் பயணத்தை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த மார்ச் மாதம் 12ஆம் திகதி இந்தியாவிலிருந்து நாடு திரும்பியிருந்த அவர், பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தநிலையில் கடந்த ஏப்ரல் 15ஆம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சுகவீனமுற்ற நிலையில் சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது அன்றைய தினமே உறுதிப்படுத்தப்பட்டது.

அந்தப் பெண் அடையாளம் காணப்பட்டமையைத் தொடர்ந்து, அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் அவரின் வீடு அமைந்துள்ள வாழைத்தோட்டம், பண்டாரநாயக்க வீதியிலுள்ள 58 வீடுகள் தனிமைப்படுத்தலுக்குள்ளாக்கப்பட்டன. அப்பகுதியைச் சேர்ந்த பலர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

அந்தப்பெண்ணுடன் தம்பதிவ யாத்திரைச் சென்று வந்திருந்த அவரது கணவர் மற்றும் மூத்த புதல்வர் மற்றும் வீட்டிலிருந்த இளைய புதல்வருக்குக் கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பது பின்னர் உறுதிப்படுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, நேற்று முந்தினம் கொரோனா வைரஸ் ஏற்பட்டிருப்பதாக அடையாளம் காணப்பட்ட 10 பேரில் 06 பேர், தம்பதிவ யாத்திரைச் சென்று திரும்பிய குறித்த பெண்ணின் வீட்டுக்கு முன்னால் வசிக்கும் வீட்டிலுள்ள 02 பேர், அவ்வீட்டுக்கு அடுத்துள்ள வீட்டைச் சேர்ந்த 2 பேர், அவ்வீட்டுக்கு அண்மையிலுள்ள இரு மாடிகளைக் கொண்ட வீட்டிலுள்ள இரு குடும்பங்களைச் சேர்ந்த 02 பேர் என அறிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், வாழைத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த அந்தப் பெண்ணின் உறவினர்கள் மற்றும் அவரின் வீட்டுக்கு அருகில் வசித்தவர்கள் என 17 பேர் நேற்று கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய வாழைத்தோட்டப் பகுதியிலிருந்து இதுவரை 27 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களில் குறித்த பெண்ணைத் தவிர ஏனைய 26 பேரும் தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டிருந்த நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொரோனா பரவல் ஆரம்பித்ததன் பின்னர் இவ்வாறு ஒரே பகுதியில் அதிகளவில் வைரஸ் தொற்றை கொண்ட குழுவினர் அடையாளம் காணப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் கடந்த மார்ச் மாதம் 31ஆம் ஒரே நாளில் 21 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். அதன்பின்னர் ஏப்ரல் 14ஆம் திகதி 15 பேர் இனங்காணப்பட்டனர். அதன்பின்னர் நேற்றைய தினமே ஒரே நாளில் கூடுதல் எண்ணிக்கை பதிவாகியுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்த மேலும் பத்துப் பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். அதற்கமைய பூரண குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 96ஆக உயர்ந்துள்ளது. இதுவரை 07 பேர் உயிரிழந்துள்ள நிலையில் 168 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

மேலும் 122 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் வைத்தியசாலைகளில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## சமூக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில்–

கொரோனோ வைரஸ் தொற்று தாக்கம் காரணமாக யாழ்ப்பாணம் இடர் வலயமாகப் பிரகரனப்படுத்தப்பட்டு கடந்த பல நாள்களாக தொடர் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

இந் நிலையில் இன்று முதல் யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுகின்றது.

எனவே சமூக இடைவெளியைக் கடைப்பிடித்துக் கொண்டு சுகாதாரப் பிரிவின் அறிவுறுத்தல்களையும் பின்பற்றி பொது மக்கள் தமது அன்றாடச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் – என்றார்.

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

பொதுத் தேர்தலை நடத்துவது தொடர்பில், தேர்தல் ஆணைக்குழு முன்னெடுக்கும் தீர்மானங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுமே தவிர, அரசின் விருப்பத்துக்கு அமைய தீர்மானங்கள் எடுக்கப்படாது.

பொதுத் தேர்தலுக்குச் செல்ல தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்தால் அதற்கமைய அரசு நடவடிக்கை எடுக்கும்.

தற்போது நாட்டில் முன்னெடுக்கப்படும் ஆட்சி சிறந்ததால் தேர்தல் அவசியமில்லையெனப் பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர். யார் என்ன கூறினாலும் தேர்தல் சட்டத்தை மீறிச் செயற்பட முடியாதென்பதால் தேர்தல் ஆணைக்குழு எடுக்கும் தீர்மானத்துக்கு அமைய அரசு செயற்படும் – என்றார்.

## இன்றுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோயாளிகளாக உள்ளவர்களைக் கொண்ட 25,230 குடும்பங்களுக்கும் என, மொத்தம் 700 கோடி ரூபா நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது எள்று அவர் கூறினார்.

ஆரம்பத்தில், அரசாங்கத்தின் நிதியுதவிக்குத் தகுதியானவர்களுக்கு மாத்திரமே 5,000 ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கு எத்தனிக்கப்பட்டதாகவும் பின்னர், தற்போதுள்ள நிலையால், தொழிலை இழந்து, வாழ்வாதாரத்தை இழந்துள்ள பல குடும்பங்கள் இருக்கின்றமை இனங் காணப்பட்டன எனவும் இந்நிலையிலேயே இவ்வாறான குடும்பங்கள் அனைத்துக்கும் இந்த நிதித் தொகை வழங்கப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

## பொருளாதாரத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் பொருளாதாரத்தைத் தொடர்ந்தும் உறுதிப்படுத்துவதற்காக கடந்த 4 வாரங்களாக நடைமுறையில் இருக்கும் ஊரடங்கு உத்தரவை தளர்த்த வேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மற்றொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கர்ப்பிணிப் பெண்ணும் அடங்குகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பெண், கொரோனா தொற்றுக்குள்ளானோருடன் சமூக தொடர்புகளைப் பேணியமையால், தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட கொட்டாஞ்சேனை, பண்டாரநாயக்கபுற பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னரும் கொரோனா தொற்றுக்குள்ளான கர்ப்பிணிப் பெண்ணொருவர் பேருவளை பகுதியில் இனங்காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனாத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுத் தாம் நடத்திய ஊடகச் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் –

ஊரடங்கு உத்தரவு நேற்றுடன் கைவிடப்பட்டுள்ளது. இரவு 8 மணியிலிருந்து அதிகாலை 5 மணிவரையே ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. வைத்திய ரீதியில் பார்த்தால் 8 மணிக்கு பிறகே கொரோனா பரவுவதாக எங்குமே உறுதிப்படுத்தப்படவில்லை. 8 மணிக்கு பிறகு எமது நாட்டு மக்கள் எப்படியும் நடமாட மாட்டார்கள். அத்துடன், பஸ் போக்குவரத்துகளும் இருக்காது. எனவே, இதன்மூலம் சமூக இடைவெளியை அரசாங்கம் கைவிட்டுள்ளது என்றார்.

அரசாங்கம், கொரோனா ஒழிப்பை நிறைவு செய்துள்ளது என்ற தகவலே இதன்மூலம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சுகாதாரத்துறை நிபுணர்களை ஓரங்கட்டிவிட்டு, அரசாங்கம் தனது செயற்பாட்டை முன்னெடுக்கின்றது.

இலங்கையிலுள்ள எந்தவொரு வைத்திய நிபுணரும் உலக சுகாதார ஸ்தாபனமும், அரசாங்கத்தின் நேற்றைய செயற்பாட்டை அனுமதிக்க மாட்டார்கள். எனவே, அரசாங்கம் தேர்தல் மூலமாக மக்களை பலிக்கடாவாக்கப் பார்க்கிறது என்று, அவர் மேலும் தெரிவித்தார்.

## மக்களே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனங்காணப்பட்டுள்ளனர். இதனையடுத்து, மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டுமென, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

# உயிர்த்த ஞாயிறு தீவிரவாதத் தாக்குதலின் சூத்திரதாரிகளை அம்பலப்படுத்துங்கள்!

## மல்வத்தபீடம் அரசிடம் கோரிக்கை



கொழும்பு.ஏப்.20

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதல்கள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்டவர்களின் முழுமையான விவரம் இதுவரை வெளியாகாதிருப்பது மிகவும் கவலையை ஏற்படுத்தியுள்ளதாக பௌத்த மக்களின் பெருந் தலைமைகளில் ஒன்றான மல்வத்துப்பீடம் தெரிவித்துள்ளது. இந்த தீவிரவாதத் தாக்குதல்களுடன் தொடர்புபட்டவர்களுக்கு விரைவில் தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று மல்வத்துப்பீட துணைநாயக்கர் நியங்கொட விஜித்தசிறி தேரர் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினமாகிய ஏப்ரல் 21ஆம் திகதி கொழும்பு கொச்சிக்கடை, நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய, மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் உட்பட பல இடங்களிலும் தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களில் பலர் பலியாகியமையோடு வெளிநாட்டவர்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயமடைந்திருந்தனர்.

இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டு நாளையுடன் ஒருவருடம் பூர்த்தியாகின்றது. மேலும் இந்த தீவிரவாத தாக்குதல்களுடன் தொடர்புபட்ட பலரும் தொடர்ந்தும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்த தாக்குதல் நடத்தப்பட்டு ஒருவருடம் ஆகின்ற நிலையில், இதுவரை அதன் சூத்திரதாரிகள் யார் என்பதை கண்டுபிடிக்காதிருப்பது கவலையை தருவதாக மல்வத்துப்பீடம் தெரிவிக்கின்றது.

மல்வத்துப்பீடத்தின் துணைநாயக்கராகிய நியங்கொட விஜித்தசிறி தேரர், நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோது இதனைக் கூறினார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:-

உயிர்த்த ஞாயிறு தினமன்று காலை கிறிஸ்தவர்கள் தங்களது ஆராதனைக்கு ஆயத்தமாகிய போது இந்தப் பயங்கரமான தீவிரவாத தாக்குதல் நடத்தப்பட்டது.

அதில் சிறுவர், இளைஞர், முதியவர் என 350 பேர்வரை பலியாகியமையோடு பலரும் காயமடைந்தனர். இன்றும் பலர் நோயாளர்களாக இருக்கின்றனர். இந்தத் தீவிரவாத தாக்குதல் குறித்த அடிப்படை விடயங்கள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் என பல விடயங்கள் குறித்து இதுவரையும் தெளிவான தகவல் வெளியாகியிருக்காதிருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

அன்று நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்த நமது சொந்தங்களை இன்றைய நாள்களில் நினைவுகூருவது நமது கடமையாகும். அன்று முதல் இன்றுவரை அங்கவீனர்களாக உள்ளவர்கள் நிரந்தரமாக குணமடைய வேண்டும் என்று பிரார்தனை செய்வதும் எமது கடமை. இந்த சந்தர்ப்பத்தில் பௌத்தர்கள் என்ற வகையில் இவற்றை நாங்கள் செய்ய வேண்டும்.

பௌத்த தர்மத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படி, வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களிடையே அனைவருக்கும் நல்லதை செய்ய வேண்டும் என்பதாகும். ஆகவே இந்த தீவிரவாத தாக்குதலின் சுபாவத்தை நினைவு படுத்திக் கொள்ளவும் வேண்டும். இந்தத் தீவிரவாத தாக்குதல் நடத்தப்பட்ட போது, கிறிஸ்தவர்கள் மிகவும் பக்குவமாக நடந்துகொண்டமை மிகப்பெரிய முன்னுதாரணமாகும் - எனவும் அவர் தெரிவித்தார்.

# பேக்கரி உற்பத்திகள் ஐம்பது வீதம் ஆரம்பம்

நாட்டில் நடைமுறையிலிருந்த ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுவதால், நாடு முழுவதிலுமுள்ள பேக்கரி உற்பத்தியாளர்களின் உற்பத்திகள், 50 சதவீத மள வில் இன்று முதல் ஆரம்பிக்கப்படுமென, அனைத்திலங்கை பேக்கரி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

ஊரடங்கு அமல் காரணமாக, பேக்கரி ஊழியர்கள் பலர், அவர்களது ஊர்களுக்குச் சென்றுள்ள நிலையில், தற்போது ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளதால், படிப்படியாக அவர்கள் தங்களது தொழில்களுக்குத் திரும்புவர் என்றும் அதனால், மீண்டும் பேக்கரி உற்பத்திகளை, இன்னும் ஒரு சில நாள்களில் முழுமையாக ஆரம்பிக்க முடியுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.




# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்பு மற்றொரு தாக்குதலுக்கும் திட்டமாம்!

## பொலிஸ் பேச்சாளர் பரபரப்புத் தகவல்

கொழும்பு, ஏப்.20

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இலங்கையில் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களுக்குப் பின்னரும் மற்றுமொரு தாக்குதலும் நடக்கவிருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன நேற்றுப் பரபரப்புத் தகவல் வெளியிட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் பொலிஸ் பேச்சாளர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட சிலரிடம் இருந்து இந்த தகவல் வெளிவந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தெற்காசிய நாடொன்றில் தாக்குதல் நடத்திவிட்டு வரும் பயங்கரவாதிகளை இலங்கையில் வைத்து பாதுகாக்கவும் சஹ்ரான் குழு முயற்சித்ததாகவும், அதற்காக புலனாய்வுப் பிரிவினரை குழப்பமடையச் செய்வதற்காக சஹ்ரான் குழு இரண்டாக பிரிந்தது போல காட்டப்பட்டதாகவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# சிறுவர்கள் மீதான சித்திரவதை ஊரடங்கு காலத்தில் அதிகரிப்பு

கொரோனா தொற்று காரணமாக அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு சட்டக் காலப்பகுதியில் சிறுவர்கள் சித்திரவதைக்குள்ளான சம்பவங்கள் அதிகரித்துள்ளன என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் 1929 என்ற துரித தொலைபேசி இலக்கத்திற்கு கிடைத்த முறைப்பாடுகளில் 43 வீதமானவை சிறுவர் சித்திரவதைக்குள்ளான சம்பவங்களுடன் தொடர்புபட்டவை என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர், பேராசிரியர் முதித விதான பத்திரன குறிப்பிட்டார்.

மார்ச் 16 ஆம் திகதி தொடக்கம் இம்மாதம் 16 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 377 முறைப்பாடுகள் அதிகார சபைக்கு கிடைத்துள்ளன எனவும் அவர் கூறினார்.

அவற்றில் 163 முறைப்பாடுகள் சிறுவர்களை சித்திரவதைக்கு உட்படுத்தியமை தொடர்பில் கிடைத்துள்ளன எனவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக சிறுவர் பாதுகாப்பு தொடர்பான உளநல ஆலோசனை சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யுனிசெவ் உள்ளிட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளூடாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் தெரிவித்தார்.

1929 என்ற துரித தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிப்பதனூடாக தேவையான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள முடியும் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் முதித விதான பத்திரன குறிப்பிட்டார்.

## நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com


# இலங்கைத் தீவின் வரலாற்றில் மிக முக்கியமான நாள் இன்று

இலங்கையின் சரித்திரத்தில், புதிய மிலேனியத்தின் மூன்றாவது தசாப்தத்தில் இன்றைய தினம் மிக முக்கிய நாளாக இருக்கப்போகின்றது.

இலங்கையின் எதிர்கால செல்நெறியை தீர்மானிக்கப் போகின்ற பல முக்கிய விடயங்கள் இன்று கட்டவிழ்கின்றன.

இந்த மிலேனியத்தில் உலகையே ஒரு கலக்குக் கலக்கிப் பந்தாடி வரும் கண்ணுக்குத் தெரியாத கொரோனா வைரஸின் சீற்றப் பார்வையிலிருந்து இந்து சமுத்திரத்தின் அழகிய முத்தான இலங்கையும் தப்பமுடியவில்லை.

அந்தக் கொரோனாவை எதிர்த்து முகம் கொள்வதற்காகத் தான் ஏற்படுத்திய நாடு தழுவிய முடக்கத்தை இலங்கை அரசு அதிரடித் தீர்மானமாகத் திரும்பப் பெற்றதால் மீண்டும் கொரோனா பந்தாட வாய்ப்பான களம் இன்று திறக்கப்படுகின்றது.

கொரோனாவை எதிர்கொண்டு மோதுவதற்கான எதிர்ப்பு மருந்துகளையோ, தடுப்பூசிகளையோ மனித குலம் இன்னும் கண்டு பிடிக்கவில்லை.

அதனால், கொரோனாவைச் சமாளிப்பதற்கு ஒரேவழி அதற்கு முகம் கொடுக்காமல் தவிர்ப்பதுதான் என்பதே உலகின் ஒரே மார்க்கமாக இருக்கின்றது. அணுகுண்டுகளால் முழு உலகையுமே அழிக்கும் வல்லமை கொண்ட வல்லாதிக்க அரசுகளிடமும் கண்ணுக்குத் தெரியாத கொரோனாவை எதிர்கொள்வதற்கு உள்ள ஒரே மார்க்கம் இதுதான்.

கொரோனா வைரஸை எதிர்கொள்ளாமல் தவிர்ப்பதற்கு ஒரே வழி அந்த வைரஸ் தொற்றியவர்களைச் சமூகத்திலிருந்து தனிமைப்படுத்துவதுதான். அதன்மூலம் ஏனையோருக்குத் தொற்றாமல் தவிர்ப்பதே இந்தத் தந்திரோபாயம்.

இந்த உத்தியை நடைமுறைப்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்டதே நாடு தழுவிய முடக்கம்.

அந்த நடவடிக்கை குறிப்பிடத்தக்களவு– வெளிப்படையாகத் தோற்றும் அளவுக்கு – திருப்தி தரக்கூடிய விதத்தில் – வெற்றிகரமான பெறுபேறைத் தந்து கொண்டிருந்த போதே திடீரென அந்த முடக்கத்தைக் கைவிடும் தான்தோன்றித்தனமான முடிவு கோட்டபாய அரசிடமிருந்து வந்திருக்கின்றது.

அரசின் இந்தத் தீர்மானம் அது தன்னுடைய அரசியல் இலக்குகளை எட்டும் குறுகிய நோக்கத்தில் மட்டுமே எடுக்கப்பட்டது என விமர்சிக்கப்படுகின்றது. சுகாதார – மருத்துவத் துறையினரின் கணிப்பீட்டில், உலகளாவிய கொரோனா ஒழிப்புத்திட்ட நடவடிக்கையில் இது Premature – பருவத்திற்கு முந்திய – செயற்பாடு என அர்த்தப்படுகின்றது.

தேசிய முடக்கத்தை முடிவுக்குக் கொண்டு வரும் செயற்பாடு இன்று நடைமுறைக்கு வருகின்றது. இதன் விளைவை – சில சமயங்களில் பெரும் விபரீதத்தை – நாடு எதிர்கொள்ள நேரிடலாம். அதனால் இது முக்கியத்துவம் பெறுகின்றது.

இதேசமயம், இலங்கையின் அரசியல் வரலாற்றில் திருப்பு முனையாக அமையக் கூடிய பொதுத் தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்காக சுயாதீன தேர்தல் ஆணையம் இன்று கூடுகின்றது.

இலங்கையில் கொரோனா வைரஸின் நிலைமை தொடர்பாக முழுமையான தகவல்களை அறிந்து கொள்வதற்காக சுகாதார – மருத்துவ உயர்மட்டத்தினர், பாதுகாப்புப் படையினர், இவ்விடயம் தொடர்பான பிற அதிகாரிகளை தேர்தல் ஆணையாளர்கள் இன்று காலை சந்திக்கின்றனர்.

இந்தச் சந்திப்பின் பின்னரே பொதுத்தேர்தலை நடத்துவதற்கான சூழல் இருக்கின்றதா, அது தொடர்பில் என்ன தீர்மானம் எடுப்பது என்பவை தொடர்பில் சுயாதீன தேர்தல் ஆணையம் முடிவு செய்யும் என்று கூறப்பட்டது.

இலங்கையின் சரித்திரத்தில் நாட்டின் தேர்தல் ஆணையம் சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும் இயங்குவதற்கான ஆணை அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் கீழ் அதற்கு வழங்கப்பட்டுள்ளது. அதை சரியாகப் பிரயோகித்து, தனது தனித்துவத்தையும், தனது அதிகாரத்தின் சுயாதிபத்தியத்தையும் சுயாதீன தேர்தல் ஆணையம் பிரயோகிப்பதற்கான – வெளிப்படுத்துவதற்கான – முதலாவது அமிலச் சோதனையாக இந்த விவகாரம் அமைந்துள்ளது.

இந்த விவகாரத்தை ஒட்டித் தனது முடிவைத் தேர்தல் ஆணையம் இன்று தீர்மானித்து அறிவிக்கும் என்பதாலும், அந்த முடிவு இலங்கையின் அரசியல் செல்நெறியின் மார்க்கத்தைத் தீர்மானிக்கும் விடயமாக அமையும் என்பதாலும் இன்றைய நாள் இலங்கை வரலாற்றில் மிக முக்கிய தினமாக அமையப் போகின்றது.

இன்றைய நாளின் பிரசித்தம் என்னவென்பது இன்று வெளிப்படையாகத் தெரியவராவிட்டாலும் இன்னும் சற்றுக் காலத்தில் நாம் முழுமையாக அதனை அறியக் கூடியதாக இருக்கும்.

# என் கருத்தைத் திரிபடுத்துகின்றார் எஸ்.பி. அவர் தலையை சோதனை செய்ய வேண்டும்

## இப்படிக் கோருகின்றார் மனோ கணேசன்



கொழும்பு,ஏப். 20

கொரொனா சோதனை பற்றிய என் கருத்தை எஸ்.பி. திஸநாயக்க திரிக்கிறார். கொரொனா நோயாளர்கள் பரிசோதிக்கப்படுவதை போன்று, அமைச்சர் திஸநாயக்கவின் தலையையும் சோதனை செய்ய வேண்டும் என நான் நினைக்கிறேன்.

- இவ்வாறு கூறியிருக்கின்றார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான மனோ கணேசன்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

கொரொனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை தொடர்பில், வெள்ளியன்று நான் தெரிவித்த கருத்தை அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க திரித்து பேசுகிறார். அதை பிடித்துக்கொண்டு ஒரு தேரர் என்னை கைது செய்ய வேண்டும் சிஐடியில் சென்று முறையீடு செய்கிறார்.

இவர்களை பொறுத்தவரையில் தேசிய பிரச்சினைகள் தொடர்பாக 'நாங்கள்' எதுவும் பேசக்கூடாது என நினைக்கிறார்கள்.

இந்நாட்டில் 40,000 கொரொனா நோயாளிகள் (Corona Positive) இருக்கிறார்கள் என நான் கூறவேயில்லை. 40,000 'முதல் தொடர்பாளர்கள்' (First Contact Persons) இருக்கின்றார்கள் என்ற நான் கூறினேன்.

'முதல் தொடர்பாளர்கள்' என அறியப்பட்டவர்கள், கொரொனா நோயாளிகளுடன், தம் நாளாந்த வாழ்வில் நேரடியாக சம்பந்தப்பட்டு ஒன்றாக, வாழ்ந்து, இருந்து, உண்டு வாழ்ந்தவர்களாவர். 'முதல் தொடர்பாளர்கள்'என்றுதான் இவர்களை மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

இந்த, 'முதல் தொடர்பாளர்கள்' பற்றி எங்களுக்கு யார் சொன்னது? மார்ச் 24 ஆம் திகதியன்று அலரி மாளிகையில் பிரதமர் தலைமையில் நடைபெற்ற கட்சி தலைவர்கள் கூட்டத்தில், இராணுவ தளபதி சவேந்திர சில்வா தான் தனது உரையில், இதை கூறினார். இராணுவ, பொலிஸ் புலனாய்வாளர்கள் வீடு வீடாக போய், தெருத்தெருவாக போய், கொரொனா நோயாளிகளுடன் தொடர்பில் இருந்தவர்கள் யாரென அடையாளம் கண்டுள்ளார்கள் என அவர் மேலும் கூறினார்.

இது முக்கியமான ஒரு பணி. இதையிட்டு நான் பாதுகாப்பு துறையை பாராட்டுகிறேன்.

சில அரசாங்க அரசியல்வாதிகள், மனோ கணேசனுக்கு எப்படி இந்த அரசாங்க இரகசிய தகவல்கள் கிடைக்கின்றன என கேட்கிறார்கள். கடவுளே, இவை இரகசிய தகவல்கள் இல்லை. கட்சி தலைவர் கூட்டத்தில் பகிரங்கமாக இராணுவ தளபதி கூறியவையாகும்.

நான் கூட்டங்களுக்கு போனால், அங்கு தூங்குவதில்லை. கூட்டங்களில் பேசப்படுவது அனைத்தையும் காது கொடுத்து கேட்கிறேன்.

என்னிடம் கேள்வி கேட்கும், இந்த அரசாங்க அரசியல்வாதிகள், கட்சி தலைவர்கள் அல்ல. இதனால், இவர்கள் இந்த கூட்டங்களுக்கு வருவதில்லை. இதற்கு நான் என்ன செய்ய முடியும்?

சீன அரசு, 40,000 பரிசோதனை கருவிகளை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளதாக அறிந்துள்ளேன். இந்த முதல் தொடர்பாளர்களை, இந்த பரிசோதனை கருவிகளை பயன்படுத்தி பரிசோதிக்கும்படி நான் அரசாங்கத்தை கோருகிறேன்.

கொரொனா நோயாளர்கள் இருந்தால், அவர்கள் இந்தப் பிரிவிற்குள்தான் அதிகமாக இருக்க முடியும். ஆகவே அவர்களை முதலில் சோதியுங்கள் என கூறுகிறேன். சோதனை வேகத்தை அதிகரியுங்கள் எனவும் கூறுகிறேன்.

இதை நான் மட்டும் கோரவில்லை. GMOA உட்பட முழு வைத்திய சமூகமே இதைதான் சொல்கிறது.

தொடர்ந்து இப்படி முகத்தை மூடிக்கொண்டு வீடுகளுக்குள் இருக்க முடியாது. நாட்டை திறந்து விட வேண்டும். ஆனால், அதற்கு முன் மக்களுக்கு நம்பிக்கை அளிக்க வேண்டும். ஆகவே சோதனைகளை அதிகரியுங்கள்.

நான் சொல்வதை சரியாக புரிந்துகொள்ள முடியாத அமைச்சர் திசாநாயக்க, நான் சொல்லாதவற்றை நான் சொன்னேன் எனக் கூறுகிறார். பொய் சொல்கிறார். கொரொனா நோயாளர்கள் பரிசோதிக்கப்படுவதை போன்று, அமைச்சர் திஸநாயக்கவின் தலையையும் சோதனை செய்ய வேண்டும் என நான் நினைக்கிறேன்.

# கொரோனா நோயிலிருந்து மீண்ட நான்கு பேர் நேற்று யாழ் திரும்பினர்

## எனினும் இரு வார காலம் வீட்டில் தனிமைப்படுத்தல் தொடருமாம்

பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் கண்காணிப்பிலிருந்த நிலையில் கோரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி வெலிகந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நான்கு பேர் முழுமையாகக் குணமடைந்து நேற்று மாலை வீடு திரும்பினர்.

ஆண்கள் இருவரும் பெண்கள் இருவருமே இவ்வாறு முழுமையாகச் சுகமடைந்த நிலையில் வெலிகந்தை வைத்தியசாலையிலிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அம்புலன்ஸில் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டு அவர்களின் வீடுகளில் இறக்கிவிடப்பட்டனர்.

அரியாலை பூம்புகாரைச் சேர்ந்த ஒருவரும் முள்ளியைச் சேர்ந்த மூவருமே இவ்வாறு முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அவர்கள் வீடுகளுக்கு திரும்பினாலும் 14 நாள்கள் சுயதனிமைப்படுத்தலுக்கு வீட்டிலேயே இருப்பார்கள் என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் அரியாலை தேவாலயத்தில் சுவிட்ஸர்லாந்திலிருந்து வருகை தந்த போதகரால் கடந்த மார்ச் 15ஆம் திகதி நடத்தப்பட்ட ஆராதனையில் பங்கேற்றவர்கள் தனிமைப் படுத்தலுக்கு உள்படுத்தப்பட்டனர்.

சுவிஸ் போதகருடன் நெருக்கமாகப் பழகிய மானிப்பாயைச் சேர்ந்த போதகர், சுவிஸ் போதகரின் சாரதி உள்ளிட்ட அரியாலை மற்றும் மானிப்பாய், வவுனியா வைச் சேர்ந்த 20 பேர் பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் கடந்த மார்ச் 23ஆம் திகதி நிறுவனதனிமைப்படுத்தலுக்குஉட்படுத்தப்பட்டனர்.

அவர்கள் 20 பேரிடமும் ஏப்ரல் முதலாம் மற்றும் மூன்றாம் திகதிகளில் மாதிரிகள் பெறப்பட்டு முதல்கட்ட பரிசோதனை நடத்தப்பட்டது. அதில் மானிப்பாயைச் சேர்ந்த மதபோதகர் உள்பட 6 பேருக்கு கோரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது. அவர்கள் 6 பேரும் வெலிகந்தை வைத்தியசாலை கோரோனா சிகிச்சைப்பிரிவுக்கு மாற்றப்பட்டனர். அவர்களில் நால்வரே இவ்வாறு முழுமையாகக் குணமடைந்துள்ளனர்.

## நாளை

**21.04.2020**
**செவ்வாய்க்கிழமை**

நட்சத்திரம்:உத்தரட்டாதி மு.ப 11.38
திதி : சதுர்த்தசி முழுவதும்
இராகுகாலம் :03.01 - 04.31
சுப நேரம் : 10.31 - 12.01

# ஆப்கானில் வீடு இடிந்து வீழ்ந்து ஒரே குடும்பத்தில் 6 பேர் மரணம்!

ஆப்கானிஸ்தானில் பெய்த கனமழை காரண மாக வீட்டின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் ஒரே குடும் பத்தைச் சேர்ந்த 6 பேர் உட்பட 7 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாள்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் பல பகுதிகளில் உள்ள வீடுகள் இடிந்து விழுந்து உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகின்றன.

ஹீனர் மாகாணம் காஷ் ஹீனர் மாவட்டத்தில் நேற்றுப் பெய்த கனமழை காரணமாக ஒரு வீட்டின் மேற்கூரை இடிந்து விழுந்தது. இந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் உயிரிழந்தனர்.

அதேபோல் நஹாங்கர் மாகாணத்தில் நடைபெற்ற மற்றொரு நிகழ்வில் வீட்டின் கூரை இடிந்து விழுந்து 9 வயது நிரம்பிய குழந்தை உயிரிழந்தது. இதனால் ஆப்கானிஸ்தானில் கனமழையால் ஏற்பட்ட விபத்தில் சிக்கி 7 பேர் இறந்துள்ளனர்.



ஆப்கானிஸ்தானில் பெரும்பாலும் களிமண்ணா லும், மரத்தாலும் வீடுகள் கட்டப்படுவதால் இது போன்ற விபத்துகள் அதிகமாக ஏற்படுவதாக அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

# பாகிஸ்தானில் கொரோனா மே மாதம் உச்சம் தொடும்!

## பிரதமர் இம்ரான்கான் தெரிவிப்பு

இஸ்லாமாபாத், ஏப்ரல் 20

பாகிஸ்தானில் மே மாதம் நடுப்பகுதியில் கொரோனா உச்சத்தை அடையும் என்றும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:-

பாகிஸ்தானில் மே 15 முதல் மே 20 ஆம் திகதி வரை கொரோனா தொற்று எண்ணிக்கை அதிகரிக்கும். நாங்கள் முன்னரே கணித்தது போல எப்ரல் 15ஆம் திகதி முதல் மருத்துவமனைகள் அழுத்தத்திற்கு ஆளா கும்.

ஏப்ரல் 25ஆம் திகதிக்குள் பாகிஸ்தானில் 50 ஆயிரம் பேர் வரை கொரோனா தொற்றால் பாதிக்கப்படலாம். எனினும் மார்ச் மாதம் கொண்டு வந்த ஊரடங்கு மூலம் தொற்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளது - என்றார்.

மேலும் நாட்டின் பொருளாதாரம், தினக் கூலிகள், வேலையிழப்புகள், பிரச்சினைகள் கவலை அளிப்ப தாக இம்ரான்கான் தெரிவித்துள்ளார்.



பாகிஸ்தானில் சிந்து மற்றும் பஞ்சாப் மாகாணங்க ளில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகம். பாகிஸ்தானில் கொரோனா தொற்றுக்கு இதுவரை 7 ஆயிரத்து 638 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர். 143 பேர் உயிரிழந்துள்ளனர்.

# சிறப்பு நிதி அறிக்கை பிரான்ஸில் தாக்கல்!

## கொரோனா தின்ற பொருளாதாரத்தை மீட்பதற்காக

பிரான்ஸில் கொரோனா வைரஸால் ஏற்பட் டுள்ள சரிவில் இருந்து நாட்டின் பொருளாதாரத்தை காக்கிற வகையில் தாக்கல் செய்யப்பட்ட நிதி அறிக் கைக்கு (பட்ஜெட்) பிரான்ஸ் நாடாளுமன்றத்தின் கீழ்சபை ஒப்புதல் அளித்தது.

கொரோனாவால் மோசமாகப் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளில் ஒன்று பிரான்ஸ். அங்கு ஒரு லட்சத்து 51 ஆயிரத்து 793 பேர் பாதிக்கப்பட் டுள்ளனர். அவர்களில் 19 ஆயிரத்து 323 பேர் உயி ரிழந்தும் 35 ஆயிரத்து 983 பேர் குணமடைந் தும் உள்ளனர்.

கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக் கப்பட்ட முடக்கம் உள்ளிட்ட நடவடிக்கைகள் கார ணமாக பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப் பட்டுள்ளது. பல லட்சக்கணக்கானவர்கள் வேலை இழந்துள்ளார்கள். பிரான்ஸின் முதுகெலும்பான விவசாயமும் அறுவடைக் காலத்தில் பெரும் பாதிப்பைச் சந்தித்தது.

இவற்றை நிவர்த்தி செய்வதற்காகவே இந்த சிறப்பு நிதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 120 பில்லியன் டொலர் (சுமார் ரூ. 22 லட்சம் கோடி) மதிப்பைக் கொண்டது. பிரான்ஸ் நாடாளுமன்றத் தின் கீழ்சபை வெள்ளிக்கிழமை இரவு தனது ஒப்பு தலை அளித்தது.

இந்த நிதி அறிக்கை நாளை செவ்வாய்க்கிழமை மேல்சபையின் ஒப்புதலுக்கு செல்கிறது. இந்த நிதி அறிக்கையில், மருத்துவ ஊழியர்களுக்கு மேலதி கக் கொடுப்பனவு வழங்கவும், போராடும் தொழிலா ளர்கள் மற்றும் அவர்கள் குடும்பங்களுக்கு நிதி உதவி செய்யவும், சிவில் விமான போக்குவரத்து மற்றும் கார் உற்பத்தி துறைக்கு உதவிகள் வழங் கிடவும் திட்டங்கள் அறிவிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உலகின் முக்கிய பொருளாதார நாடுகளில் ஒன் றான பிரான்ஸில் நடப்பு ஆண்டில் கொரோனா வால் பொருளாதார வளர்ச்சி 9 சதவீத அளவுக்கு சுருங்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

## உலகையே ஆட்டிப் படைக்கும் கொரோனா வைரஸை

# சீனா தெரிந்தேதான் பரப்பியது என்றால் கடும் விளைவைச் சந்திக்க வேண்டிவரும்

## அமெ. அதிபர் ட்ரம்ப் எச்சரிக்கை



வோஷிங்டன், ஏப்ரல் 20

கொரோனா வைரஸை சீனா தெரிந்தேதான் பரப் பியது என்று கண்டுபிடிக்கப்பட்டால் கடும் விளைவு களைச் சந்திக்க நேரிடும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம் எச்சரித்துள்ளார்.

அதுமட்டுமல்லாமல் "கொரோன வைரஸால் சீனா வில் நிகழ்ந்த உயிரிழப்புகளின் புள்ளிவிவரம் தொடர் பில் எனக்கு பலவேறு சந்தேகங்கள் இருக்கின்றன" என்றும் அதிபர் ட்ரம்ப் தெரிவித்தார்

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் சீனாவின் ஹூபேய் மாகாணத்தில் உள்ள வுஹான் நகரில்தான் கொரோனா வைரஸ் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. சீனா வில் ஏற்படுத்திய பாதிப்பைக் காட்டிலும் அமெரிக்கா வில் மோசமான பாதிப்பை கொவிட் - 19 வைரஸ் ஏற் படுத்தி வருகிறது.

இதுவரை அங்கு 39 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ள னர். 7 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள் ளனர். ஐரோப்பிய நாடுகளான இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ், பிரிட்டன், ஜெர்மனியிலும் கொரோனா வைரஸ் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

சீனாவின் வுஹான் நகரில் உள்ள ஈரச் சந்தைகள் என வர்ணிக்கப்படும் விலங்கு இறைச்சி விற்பனைச் சந்தையில் விற்கப்பட்ட வெளவால்களிடம் இருந்துதான் கொரோனா பரவியதாகக் நம்பப்பட்டு வந்தது. அந்தச் சந்தையும் மூடப்பட்டது.

ஆனால், அமெரிக்காவிலிருந்து வெளிவரும் தி வோஷிங்டன் போஸ்ட், தி ஃபாக்ஸ் நியூஸ் அலைவரிசை ஆகியவை இரகசியமாகச் சேகரித்த செய்திகளின் அடிப்படையில் சார்ஸ் - கொவிட் - 19 வைரஸ் வெளவால் களிடம் இருந்து பரவவில்லை, அது வுஹான் நகரில் இருக்கும் சீன அரசின் ஆய்வகங்களிலிருந்து கவனக் குறைவால் வெளியே பரவியுள்ளது எனச் செய்தி வெளி யிட்டுள்ளன.

இந்தச் செய்தி வெளியானதிலிருந்து அதிபர் ட்ரம்ப் அதிருப்தியான கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார். வோஷிங்டனில் அதிபர் ட்ரம்ப் நேற்று செய்தியாளர்களுக் குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

கொரோனா வைரஸை சீனா கையாண்ட விதம் எங்களுக்கு மிகுந்த அதிருப்தி அளிக்கிறது. எந்த வித மான வெளிப்படைத்தன்மையும் இல்லை, அமெரிக்கா சார்பில் கேட்கப்பட்ட எந்தவிதமான தகவல்களும் வழங்கப்படவில்லை.

கொரோனா வைரஸ் பரப்பியதற்கு சீனாதான் கார ணமாக இருந்தது என்று கண்டுபிடிக்கப்பட்டால் கடும் விளைவுகளைச்சந்திக்க நேரிடும். 1917ஆம் ஆண்டுக்குப் பின் அமெரிக்காவில் இதுபோல் யாரும் உயிரிழப்பைச் சந்தித்தது இல்லை.

சீனாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான நட்பு நல்லவிதமாகத்தான் இப்போதுவரை இருக்கிறது. ஆனால் இதுபோன்ற விடயங்களைக் கேட்டபின் தி டீரென மிகப்பெரிய மாற்றம் இருக்கிறது. சீனா மீது கோபமாக இருக்கிறீர்களா எனக் கேட்கிறீர்கள். என்னு டைய பதில் ஆம்!

ஒரு விடயத்தை புரிந்துகொள்ளுங்கள் தெரியாமல் செய்யும் தவறுக்கும், நம்மை மீறி நடப்பதற்கும், வேண் டுமென்றே ஒரு தவறைச் செய்வதற்கும் மிகப்பெரிய வேறுபாடு இருக்கிறது உங்களுக்குத் தெரியும்.

சீனாவுக்கும், அதிபர் வேட்பாளராகப் போட்டியிடும் ஜோ பிடனுக்கும் இடையே நல்ல நட்புறவு இருக்கிறது. ஒருவேளை அதிபர் தேர்தலில் ஜோ பிடன் வென்றால், அமெரிக்காவை சீனா சொந்தமாக்கிவிடும். இப்போது வரை உலகின் மிகப்பெரிய பொருளாதாரத்தை நாங்கள் வைத்திருக்கிறோம். எங்கள் பக்கத்தில்கூட சீனா வர முடியாது.

அதேபோல கொரோனா வைரஸ் உயிரிழப்பில் அமெரிக்காதான் முதலிடத்தில் இருப்பதாக பலரும் நினைக்கிறார்கள். ஆனால், நிச்சயம் நாங்கள் முதலிடத் தில் இருக்க முடியாது. சீனாதான் முதலிடத்தில் இருக் கும். வுஹானில் கொரோனா உயிரிழப்புகளை சீனா திருத்தி வெளியிடுகிறது. இதையெல்லாம் வைத்து பார்க்கும்போது உண்மையான உயிரிழப்பு அதிக மாக இருக்கும். ஆனால், சீனாவின் அதிகாரப்பூர்வ அறிக்கை அதை மறைக்கிறது - இவ்வாறு அதிபர் ட்ரம்ப் தெரிவித்தார்.

## தமிழகத்தில் நேற்று மட்டும் 105 பேருக்கு தொற்று உறுதி

தமிழகத்தில் நேற்று மட்டும் கொரோனாவால் பாதிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை 105 ஆக உயர்ந்துள்ள நிலையில், ஒட்டுமொத்தமாக ஆயிரத்து 477 பேர் தொற்றுக்குள்ளா கியுள்ளனர்.

தமிழகத்தில் ஏப்ரல் முதல் வாரத்தில் இருந்து கொரோ னாவால் பாதிக்கப்பட்டவர்க ளின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமே இருக்கிறது. இத னால் பாதிக்கப்பட்டவர்களின் எணிக்கை ஆயிரத்தை தாண்டி விட்டது.

கடந்த ஐந்து நாள்களாக புதிதாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 56க்கு கீழ் இருந்து வந்தது. ஆனால் நேற்று 105 பேர் புதிதாகப் பாதிக் கப்பட்டனர். இதில் 50 பேர் சென்னையைச் சேர்ந்தவர்கள்.

இன்றைய 105 எண்ணிக் கையுடன் ஒட்டுமொத்தமாகத் தமிழகத்தில் இதுவரை ஆயி ரத்து 477 பேர் கொரோனா வால் பாதிக்கப்பட்டுள்ளனர். 411 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

மேலும், சுகாதாரத்துறை சார்பில் வெளியிட்டுள்ள அறிக் கையில் "சென்னையில் மட் டும் இன்று ஒரே நாளில் 50 பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நான்கு மருத்து வர்களுக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள் ளது. புத்தாம்வகுப்புமாணவருக் கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுவரை 40 ஆயிரத்து 876 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. 21 ஆயி ரத்து 381 பேர் வீட்டுக் கண்கா ணிப்பிலும், 20 பேர் அரசு முகாமில் கண்காணிப்பிலும் உள்ளனர்" எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# ஏழைகளுக்கு எதுவும் இல்லை இதயமற்றது பா.ஜ.கட்சி அரசு!

### காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் சாடல்

முதலில் 21 நாள்கள், அதற்குப் பிறகு 19 நாள்கள் என 40 நாட்கள் ஊரடங்கு பிறப்பித்த இந்திய அரசு ஏழைகளுக்கு ஏதும் செய்யாமல் இருக்கிறது என காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ப.சிதம்பரம் குற்றம்சாட்டினார். இதயமற்ற அரசுதான் இப்படி எதுவும் செய்யாமல் இருக்கும் என்றும் அவர் சாடினார்.

கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்த இந்திய அரசு மார்ச் 25ஆம் திகதியில் இருந்து ஏப்ரல் 14ஆம் திகதி வரை முதல்கட்ட ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தது. ஆனால் கொரோனா இந்த காலக்கட்டத்திற்குள் கட்டுக்குள் வரவில்லை. இதனால் மேலும் 19 நாட்கள் அதாவது மே 3ஆம் திகதி வரை ஊரடங்கு நீட்டிக்கப்பட்டது.

ஏற்கனவே 21 நாட்கள் வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடக்கும் மக்கள் உணவு இல்லாமல் அவதிப்படுகிறார்கள். அவர்களுக்கு உதவ வேண்டும் என முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் வலியுறுத்தினார். குறைந்தது 65 ஆயிரம் கோடி ரூபாயை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டு என அவர் ஆலோசனை வழங்கினார். ஆனால் மத்திய அரசு எதையும் கேட்கவில்லை.

இந்நிலையில் மேலும் 19 நாட்கள் ஊரடங்கு நீடிக்கப்பட்டுள்ளமை ஏழை மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது என்று சிதம்பரம் சுட்டிக்காட்டுகின்றார்.

இதுகுறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் "கைகளில் பணம் இல்லாமல் இலவசமாகக் கிடைக்கும் சமை க்கப்பட்ட உணவுகளை வாங்குவதற்காக வரிசையில் மக்கள் நிற்கும் காட்சிகள் நாள்தோறும் அதி கரிப்பதை காண முடிகிறது. இதுபோன்ற ஏராளம ான சம்பவங்கள் நடக்கின்றன. இதயமற்ற ஒரு அரசுதான் இப்படி மக்களுக்கு எந்தவிதமான உதவியும் செய்யாமல் அமைதியாக இருக்கும்" என்று பதிவிட்டுள்ளார்.

மேலும் "மாநில அளவில் இன்று பாதி க்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை தெரிவித்ததில் ஐஎம்சிஆர் அறிக்கைக்கும், மத்திய சுகாதாரத்துறை அமைச்சகமும் வெளியிட்டுள்ள அறிக்கைக்கும் இடையில் குழப்பமும், முரண்பாடும் உள்ளது" எனவும் அவர் தெரிவித்துள்ளார்

# சாதி, மதம், மொழி, இனம் ஏதும் பார்க்காது கொரோனா வைரஸ்!

### எனவே ஒற்றுமையாகப் போராட மோடி அழைப்பு

புதுடெல்லி, ஏப்ரல் 20

உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் இனம், மொழி, மதம், நிறம் சாதி பார்க்காது. எனவே அதனை எதிர்த்து ஒற்றுமையாகப் போரா டுங்கள் என பிரதமர் மோடி தெரிவித் துள்ளார்.



கொரோனா வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்த இந்தியாவில் 40 நாள் ஊரடங்கு உத்தரவு மே 3ஆம் திகதி வரை நடைமுறையில் உள்ளது. ஆனால் கொரோனா வைரஸ் தொற்று நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.

இந்தியாவில் நேற்று இரவு வரை கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக் கப்பட்டவர்களின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 365ஆக அதிகரித்துள்ளது. 2 ஆயிரத்து 466 பேர் குணமடைந்துள் ளனர். 521 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டா லும் நோயின் வீரியத்தை அறியாமல் சிலர் கட்டுப்பாட்டை மீறுகின்றனர். இதனால் அதிகாரிகள் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

இந்த நிலையில் கொரோனாவைக் கட்டுப்படுத்த இந்திய மக்கள் ஒற்றுமை யாகப் போராட வேண்டும் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். இதுகுறித்து பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் "கொரோனா தாக்குவதற்கு முன் இனம், மொழி மதம், நிறம், சாதி, மதம் பார்க்காது. நம்முடைய பதில்கள், நடத்தை ஆகியவை ஒருங்கிணைப்பு மற்றும் சகோதரத்து வத்தை முதன்மையாகக் கொண்டதா கவே இருக்கவேண்டும். நாம் இதில் ஒன் றாக இணைந்திருக்கிறோம்" என்று பதி விட்டுள்ளார்.

# பரப்பன சிறையில் முக கவசம் அணியும் சின்னம்மா சசிகலா!



சொத்துக் குவிப்பு வழக்கில் 4 ஆண் டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட சசிகலா பெங்களூரு சிறையில் அடைக் கப்பட்டுள்ள நிலையில் கொரோனா பீதி யால் முக கவசம் அணிந்துள்ளார்.

தண்டனை விதிக்கப்பட்ட சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் பெங்க ளூரு பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் பீதியால் சிறை களில் இட நெருக்கடியைத் தவிர்க்கும் வகையில் உச்ச நீதிமன்றம் உத்தர விட் டது. அதன்படி 7 ஆண்டுகளுக்குக் கீழ் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர் களை பிணையில் அல்லது பரோலில் விடுதலை செய்யலாம் என்றும் இது குறித்து உயர்மட்ட குழு அமைத்து அந்தக் குழு பரிந்துரைக்கும் கைதிகளை விடு தலை செய்ய வேண்டும் என்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இதையடுத்து கர்நாடக சிறைகளில் இருந்து ஆயிரத்து 112 கைதிகள் விடு தலை செய்யப்பட்டனர். இதில் 405 கைதி கள் பரோலிலும், 707 கைதிகள் இடைக் காலப் பிணையிலும் விடுதலை செய்யப் பட்டனர். ஆனால் கொரோனா பீதி காரண மாக சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகி யோர் பரோலில் வரவில்லை. சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் சிறை யில் முக கவசம் அணிந்துள்ளனர். அவர் கள் சமூக விலகலைக் கடைபிடித்து வருகி றார்கள். உணவு வாங்க வரிசையில் நிற் கும் போது இடை வெளிவிட்டு நின்று உணவு வாங்கி வருகிறார்கள்.

பரப்பன அக்ரஹார சிறையில் இட நெருக்கடி கிடையாது. ஓர் அறையில் 5 கைதிகள் வரை தங்க வைக்கலாம். தற்போது 3 கைதிகள் வரையே ஒவ்வொரு அறையிலும் தங்க வைக்கப்பட்டு உள் ளனர்.

சிறையில் கைதிகளுக்கு வழக்கமான உணவுகளே வழங்கப்பட்டு வருகின்றன. சர்க்கரை, ரத்த அழுத்தம் உள்ள கைதி களுக்கு மருத்துவர்கள் மாத்திரைகளும் வழங்கி வருகிறார்கள். அதன்படி சசி கலாவுக்கு வழக்கம்போல மாத்திரைகள் வழங்கப்படுகிறது.

சிறையில் சசிகலா ஏற்கனவே கன்ன டம் கற்றார். தற்போது கைவினைப் பொருள்கள் மற்றும் ஊதுபத்தி தயாரிக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்.

# வெளிநாட்டு விசா மே 3 வரையும் நீடிக்கப்பட்டது!

இந்தியாவில் சிக்கி தவிக்கும் வெளிநாட்டினரின் விசா காலம் மே 3ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டி ருப்பதாக இந்திய அரசு அறிவித் துள்ளது.

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட பல்வேறு நாடு களில் இருந்து இந்தியாவுக்குச் சுற் றுலாவாகவும், பணி நிமித்தமாக வும் ஏராளமானோர் வருகிறார்கள்.

கொரோனா பாதிப்பின் காரண மாக இந்தியாவில் இருந்து வெளி நாடுகளுக்கு விமான சேவைகள் நிறுத்தப்பட்டன. இதேபோல் மற்ற நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு வரும் விமானங்களும் ரத்துச் செய்யப்பட்டன.

இதனால் இந்தியாவுக்கு வந்த வெளிநாடுகளைச் சேர்ந்த பலர் தங்கள் சொந்த நாடுகளுக்குத் திரும்ப முடியவில்லை. விசா காலம் முடிந்த பின்னரும் அவர்கள் இந்தி யாவில் தங்கி இருக்க வேண்டிய கட் டாய சூழ்நிலை ஏற்பட்டது.

அப்படி தங்கள் சொந்த நாடு களுக்கு திரும்ப முடியாதவர்களின் விசா அனுமதியை முதலில் ஏப்ரல் 15ஆம் திகதி வரையும், பின்னர் இரண்டாவது முறையாக ஏப்ரல் 30ஆம் திகதி வரையும் நீட்டித்து இந் திய உள்துறை அமைச் சகம் ஏற்கனவே உத்தர விட்டது.

இந்த நிலையில், கொரோனா பாதிப்பு குறையாததால் இந்தி யாவில் ஊரடங்கு வரு கிற மே 3ம் திகதி வரை நீட்டிக்கப்பட் டுள்ளது.

இதைத்தொடர்ந்து, இந்தியாவில் சிக்கி தவிக்கும் வெளிநாட்டினரின் விசா காலம் மீண்டும் நீட்டிக்கப்பட் டுள்ளது.

இதுகுறித்து மத்திய உள்துறை அமைச்சகத்தின் வெளிநாட்டு பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:-

வெளிநாட்டினர் பிராந்திய வெளி நாட்டினர் பதிவு அதிகாரிக்கு இணை யம் மூலம் விண்ணப்பித்து தங்கள் விசா மற்றும் இ - விசா காலத்தை மே 3ஆம் திகதி வரை நீட்டித்துக் கொள்ளலாம்.

இதேபோல் தூதரக அதிகாரிகள், ஐ.நா. அதிகாரிகள் நீங்கலாக பிற வெளிநாட்டினருக்கு விசா வழங்கு வதும் 3ஆம் திகதி வரை நிறுத்தி வைக்கப்படுகிறது.

இந்தியாவுக்கு வெளிநாட்டினர் வரும் பகுதிகளில் உள்ள 107 சுங்க சோதனைச்சாவடிகளும் மே 3ஆம் திகதி வரை மூடப்பட்டு இருக்கும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள் ளது.

# சர்வதேச போக்குவரத்துகளை இலங்கை எப்போது தொடங்கும்?

## ஜெனரல் ஷவேந்திர சில்வா அளித்த சிறப்பு நேர்காணல்



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கடந்த ஒரு மாத காலம் முடக்க நிலைமை அறிவிக்கப்பட்ட போதிலும், இன்றைய தினம் (20) முதல் அந்த முடக்க நிலைமை கடும் கட்டுப்பாட்டுகளுக்கு மத்தியில் தளர்த்தப்படுகின்றது.

கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் தொடர்ந்து ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள அதேவேளை, ஏனைய பகுதிகள் அதிகாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை திறக்கவுள்ளதாக அரசாங்கம் நேற்று முன்தினம் அறிவித்தது.

மீண்டும் இரவு 8 மணி முதல் அதிகாலை 5 மணி வரை மறுஅறிவித்தல் விடுக்கப்படும் வரை நாடு தழுவிய ரீதியில் ஊரடங்கு அமல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இலங்கையில் எதிர்வரும் நாள்கள் எவ்வாறு அமையும் என்பது தொடர்பில் இராணுவ தளபதியும், கோவிட் - 19 ஒழிப்புக்கான தேசிய நடவடிக்கை மையத்தின் தலைவருமான லெப்டினன் ஜெனரல் ஷவேந்திர சில்வாவிடம் பி.பி.சி. தமிழ் வினவியது.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் நிலைமை மிகவும் சிறந்ததாக உள்ளதென லெப்டினன் ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவிக்கின்றார்.

தாம் திட்டமிட்ட வகையில் நாட்டை சிறந்ததொரு நிலைமைக்குக் கொண்டு செல்ல முடிந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் சமூகத்திற்குள் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவது தற்போது மிகவும் குறைவடைந்துள்ளதாகவும், தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கே கடந்த காலங்களில் கொரோனா தொற்று அதிகளவில் ஏற்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையிலேயே கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் ஊரடங்கைத் தளர்த்த ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான அரசாங்கம் தீர்மானத்தை எட்டியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இலங்கையில் ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டதன் பின்னர் சர்வதேசத்திற்கு இடையிலான நடவடிக்கைகள் எவ்வாறு அமையும் என இராணுவ தளபதியிடம் வினவப்பட்டது.

இலங்கைக்கும், சர்வதேச நாடுகளுக்கும் இடையிலான தொடர்பை ஆரம்பிப்பது குறித்து தற்போதைக்கு எதிர்பார்க்க முடியாது என அவர் குறிப்பிட்டார்.

கொரோனாத் தொற்றை இலங்கை எதிர்கொள்ளும் ஐந்தாவது வாரம் இதுவென அவர் சுட்டிக்காட்டினார்.



இலங்கை தற்போது காணப்படுகின்ற நிலையில், சர்வதேச எல்லையைத் திறக்கின்றமை குறித்து எதிர்பார்க்க முடியாத நிலைமை காணப்படுவதாகவும் ஷவேந்திர சில்வா கூறினார்.

முதலில் இலங்கையின் நிலைமையை ஸ்திரப்படுத்தியதன் பின்னரே, சர்வதேச எல்லையைத் திறந்து நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் நிலைமை அவதானிக்கின்ற விதத்தில் தற்போது ஸ்திரமடைந்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கோவிட் - 19 வைரஸ் ஒழிப்பிற்காக நாட்டு மக்கள் பாரிய அர்ப்பணிப்புக்களை செய்துள்ளனர் எனவும், 95 சதவீதமானோர் அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளை மதித்து செயற்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மக்களின் அர்ப்பணிப்புக் காரணமாகவே வெகு விரைவில் இலங்கையை வழமைக்கு கொண்டு வர முடிந்துள்ளதாகவும் ஷவேந்திர சில்வா கூறினார்.

கோவிட் 19 தொற்றை நாட்டிலிருந்து முழுமையாக ஒழிக்க வேண்டும் என்பதே நாட்டு மக்களின் ஒரே எதிர்பார்ப்பாக இருந்தது எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

இந்த நிலையில், கோவிட் - 19 வைரஸ் ஒழிப்பை மேற்கொள்வதற்கான பாரிய பொறுப்பு தம்வசம் காணப்படுவதாகவும், அதனை சரிவர நிறைவேற்ற வேண்டிய பொறுப்பும் தமக்குள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த பின்னணியில், வெளிநாடுகளுக்குச் செல்வது, வெளிநாட்டு தொடர்புகளை பேணுவதற்கு அவசரப்பட தேவையில்லை என கூறிய ஷவேந்திர சில்வா, சர்வதேச தொடர்புகள் தற்போதைய நிலைமைக்கு முக்கியம் அல்ல எனவும் சுட்டிக்காட்டினார்.

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகைத் தர 59,000திற்கும் அதிகமான இலங்கையர்கள் விருப்பம் தெரிவித்துள்ள நிலையில், அவர்களை அழைத்து வர எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என கோவிட் - 19 ஒழிப்புக்கான தேசிய நடவடிக்கை மையத்தின் தலைவருமான லெப்டினன் ஜெனரல் ஷவேந்திர சில்வாவிடம் பி.பி.சி. தமிழ் வினவியது.

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் அவர்கள் தங்கியுள்ளநாடுகளில்தனிமைப்படுத்தப்பட்டு தாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டாலும், அவர்கள் இலங்கைக்குள் மீண்டும் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டே தமது வீடுகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என கோவிட் - 19 ஒழிப்புக்கான தேசிய நடவடிக்கை மையத்தின் தலைவருமான லெப்டினன்ட் ஜெனரல் ஷவேந்திர சில்வா கூறினார்.

அது எந்தக் காலமாக இருந்தாலும், வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குள் வருகைத் தருகின்ற இலங்கையர்கள் தனிமைப்படுத்தப்பட்டு, கண்காணிக்கப்பட்டே நாட்டிற்குள் அனுமதிக்கப்படுவார்கள் என அவர் உறுதியளித்தார்.

இலங்கைக்குள் 50,000 கொரோனா தொற்றாளர்கள் இருக்கின்றனர் எனக் கூறப்படும் கருத்து உண்மையா எனவும் அவரிடம் வினவப்பட்டது.

இலங்கையில் கோவிட் - 19 அடையாளம் காணப்பட்ட மார்ச் மாதம் முதல் வாரத்தில் வெளிநாடுகளிலிருந்து அவ்வாறான தொகை பயணிகள் நாட்டிற்குள் வருகைத் தந்த போதிலும், அந்தளவிலான கொரோனா தொற்றாளர்கள் நாட்டில் இல்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்கட்சிகள் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்ற போதிலும், அரசாங்கத்திற்கே உண்மை நிலவரம் தெரியும் என்றார் இராணுவத் தளபதியும், கோவிட்-19 ஒழிப்புக்கான தேசிய நடவடிக்கை மையத்தின்தலைவருமானலெப்டினன் ஜெனரல் ஷவேந்திர சில்வா.

கொரோனா வைரஸ் ஒழிப்பின் பின்னர் புதியதொரு இலங்கையை கட்டியெழுப்புவது நிச்சயம் என இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் ஷவேந்திர சில்வா நம்பிக்கை வெளியிட்டார்.

கொரோனா வைரஸ் பிரச்சினைகள் நிறைவடைந்ததன் பின்னர், இலங்கைக்குள் முடியுமானளவு உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டு உள்நாட்டு உற்பத்தியிலேயே நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தன்னிறைவுடனான திட்டத்தை நோக்கி இலங்கை எதிர்காலத்தில் நகரும் என்ற எதிர்பார்ப்புடன் தாம் கடமையாற்றி வருகிறார் எனவும் இராணுவத் தளபதி குறிப்பிட்டார்.

இலங்கையிடம் அனைத்து விதமான வளங்களும் காணப்படுகின்ற போதிலும், இலங்கை இதுவரை வெளிநாடுகளை அதிகளவில் நம்பியிருந்ததாக அவர் கூறினார்.

எனினும், இனிவரும் காலங்களில் இலங்கை புதியதொரு கோணத்தை நோக்கி நகரும் என்ற நம்பிக்கை தனக்குள்ளதாக லெப்டினன் ஜெனரல் ஷவேந்திர சில்வா நம்பிக்கை வெளியிட்டார்.

நன்றி - பி.பி.ஸி. இணையம்

கொரோனா வைரஸ் பிரச்சினைகள் நிறைவடைந்ததன் பின்னர், இலங்கைக்குள் முடியுமானளவு உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டு உள்நாட்டு உற்பத்தியிலேயே நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தன்னிறைவுடனான திட்டத்தை நோக்கி இலங்கை எதிர்காலத்தில் நகரும் என்ற எதிர்பார்ப்புடன் தாம் கடமையாற்றி வருகிறார் எனவும் இராணுவத் தளபதி குறிப்பிட்டார்.

# 4 ஆயிரம் கிலோ பூசணிக்காய் விவசாயியின் வீட்டில் தேக்கம்

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மடுக்கரை கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட பூசணிக்காய் பயிர்ச்செய்கையினால் அதிக விளைச்சல் கிடைக்கப்பெற்றுள்ள போதும் பூசணிக்காயை விற்பனை செய்ய முடியாமல் ஏழை விவசாயி ஒருவர் தவித்து வருகிறார்.

சுமார் 4 ஆயிரம் கிலோ பூசணிக்காயை இந்த விவசாயி அறுவடை செய்துள்ளார். விவசாயிக்கு பாடசாலை செல்லும் மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

தோட்டச்செய்கையை வாழ்வாதாரத் தொழிலாக செய்து வரும் இவர் ஏற்கனவே கடனைப் பெற்று பூசணி செய்கையை மேற்கொண்டுள்ளார்.

தனது தோட்டத்தில் விளைந்து அறுவடை செய்து வைத்துள்ள சுமார் 4 ஆயிரம் கிலோ பூசணிக்காயை விற்பனை செய்ய முடியாமல் தவித்து வருகின்றார்.

நாடு சீராக இருந்த போது ஒரு ஏக்கர் பரப்பளவில் பூசணி பயிர் செய்துள்ளார். நல்ல விளைச்சல் கிடைத்துள்ளது. அறுவடை செய்யும் நேரத்தில் 'கொரோனா' வைரஸ் பிரச்சினையால் போக்குவரத்து தடைகள் ஏற்பட்டு தம்புள்ளை மரக்கறி சந்தை சீராக இயங்கவில்லை.


மன்னார் மடுக்கரையில் நிலைமை

இதனால் 4 ஆயிரம் கிலோ பூசணிக்காயை விற்பனை செய்ய முடியாமல் வீட்டில் உள்ள மூன்று அறைகளிலும் குவித்து வைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய கொரோனா ஊரடங்கால் வாழ்வாதாரத்திற்கு பெரிதும் கஷ்டப்பட வேண்டி உள்ளது என குறித்த விவசாயி தெரிவித்தார்.

தோட்டம் செய்வதற்கு பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களை மீள செலுத்த வேண்டும். அரசாங் கம் மரக்கறி வகைகளை கொள்வனவு செய்வதாக அறிய முடிகின்றது. அது பற்றி எந்த முடிவும் இல்லை.

எனவே அரச அதிகாரிகள் எம்மீது அக்கறை கொண்டு இவற்றை விற்பனைசெய்துதருவதற்குநடவடிக்கை எடுத்து விவசாயிகளை காப்பாற்ற முன் வர வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

மேலும் பூசணி தேவைப்படும் உள்ளூர் வியாபாரிகள் 0772378121 என்னும் இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு பூசணிக்காயை கொள்வனவு செய்து உதவிபுரியுமாறும் அவர் கேட்டு கொண்டார்.

# பனையில் இருந்து தவறி விழுந்தவர் உயிரிழப்பு

பனையில் இருந்து தவறி விழுந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

உயரப்புலம் இளவாலை பகுதியைச் சேர்ந்த அம்பலவாணர் சிவகுமார்(வயது 43)என்ற இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் கூறப்படுவதாவது:-

இளவாலை பகுதியில் உள்ள பனைமரத்தில் கள்ளு சீவுவதறகாக கடந்த 17 ஆம் திகதி இந்தக் குடும்பஸ்தர் மரம் ஏறியுள்ளார். பனை மரத்தின் வட்டுக்குள் இருந்து கள்ளு சீவிக் கொண்டு இருந்தபோது கால் சறுக்கி பனை மரத்திலிருந்து கீழே விழுந்துள்ளார்.

மயக்கமடைந்த நிலையில் உடனடியாக தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று மதியம் உயிரிழந்தார். இந்த இறப்பு தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

Free Online Seminar!
Android App Development for KIDS!
பாடசாலை மாணவர்களுக்கானது!
10 வயதிற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான 2 மணிநேர இலவச செயலமர்வு!
இந்தியா - தமிழ்நாட்டின் Robatics கற்பித்தலில் புகழ்பெற்ற நிறுவனமான OTOMATIKS நிறுவனத்தினால் நேரடியாக நாடாத்தப்படும் இலவச செயலமர்வு எதிர்வரும் 20ஆம் திகதி மாலை 4 மணிமுதல் 6 மணிவரை நடைபெறவுள்ளது.
இந்த செயலமர்வில் உங்கள் வீட்டுப் பிள்ளைகளும் கலந்து பயன்பெற விரும்பினால் கீழுள்ள இலக்கத்திற்கு உங்கள் மின்னஞ்சல் முகவரியை What's app செய்யவும்.
(தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கற்கைநெறிகள் நடைபெறும். உலகின் எந்தப் பாகத்தில் இருந்தும் கலந்துகொள்ளலாம். முழுமையான இணையவழி கற்கைநெறி 30 மணிநேரம் - விருப்பம் உள்ளவர்கள் கட்டணம் கட்டி முழுமையான பயிற்சியை பெற்றுக்கொள்ளலாம் -சான்றிதழ் வழங்கபடும்)
முதலில் பதிவுசெய்யும் 250 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி!
மேலதிக விபரங்களுக்கு: 076 817 0077
அனுசரணை: கற்பகவனம், காலைக்கதிர் பத்திரிகை

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# வீடுடைத்து 25 பொதி நெல்லை கபளீகரம் பண்ணிய யானைகள்





முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மணவாளன்பட்டமுறிப்பு கிராம அலுவலர் பிரிவில் மேழிவனம் கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுகின்றது

வனப்பகுதியின் மத்தியில் காணப்படுகின்ற இந்தப் பிரதேசத்தில் 32 குடும்பங்களுக்கு மேல் வாழ்ந்து வருகின்றன. இந்த பகுதியில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ள நிலையில் யானை வேலி அமைத்து தருமாறு நீண்டகாலமாக மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்ற போதும் இதுவரை அந்த இடத்திற்கான யானை வேலிகள் அமைத்து கொடுக்கப்படவில்லை

இந்தப் பகுதியில் சனி இரவு காட்டு யானை வீடு ஒன்றை உடைத்து, வீட்டினுடைய அறையினுள் களஞ்சியப்படுத்தப் பட்டிருந்த 25 பை நெல்லையும் உணவாகக் கப்ளீகரம் பண்ணிச் சென்றுள்ளது

இரவு வேளையில் வீட்டில் உள்ளவர்கள் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் வீட்டிற்கு அருகில் வந்த யானை வீட்டின் முன்புற யன்னல் கண்ணாடியை உடைத்து நோட்டமிட்டுள்ளது. பின்னர் நெல்லு இருந்த அறையை உடைத்து வீட்டிற்குள் இருந்த இருபத்தியைந்து பொதி நெல்லையும் உணவாக உட்கொண்டு சென்றுள்ளது

நாட்டில் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக பல்வேறு இன்னல்களுக்கு மக்கள் முகம் கொடுத்துள்ள நிலையில் இந்த காட்டு யானைகளினுடைய தாக்கத்தினால் தங்களது உணவுத் தேவைக்காக இருந்த நெல்லையும் இழந்து தவிக்கின்றனர் இக்குடும்பத்தினர்.

மிகவும் பின்தங்கிய பகுதியாக காணப்படுகின்ற இப்பிரதேசத்தில் உள்ளவர்கள் நாளாந்தஜ் கூலித் தொழிலை நம்பியே வாழ்ந்து வருகின்றனர்

இந்தப் பகுதியில் மின்சாரம் வழங்கப்பட்டிருந்த நிலைமையிலும் இரண்டு வருடங்களுக்கு மேலாக மின் பட்டியல் வழங்கப்படாமல் திடீரென இரண்டு வருடங்கள் முழுவதுக்குமான பட்டியல் வழங்கியதன் காரணமாக அதிக தொகை கட்ட முடியாத காரணத்தினால் பல வீடுகளில் மின் துண்டிக்கப்பட்டுள்ளது

யானைத் தாக்கம் அதிகரித்துள்ள பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளமையால் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ள மக்கள் தற்போது யானைகளின் நேரடித் தாக்குதல்களுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

எனவே மிக விரைவாக இந்தப் பகுதிக்கு யானை வேலி அமைத்து தருமாறு கோரியுள்ள மக்கள் அதிக தொகையான மின் கட்டணத்தை ஒரே தடவையில் செலுத்த முடியாமையினால் பகுதி பகுதியாக செலுத்தக்கூடிய ஒழுங்குகளை மேற்கொண்டு தருமாறும் உடனடியாக தமக்கான இந்த மின் இணைப்புகளை பெற்றுத் தருவதற்கு ஆவன செய்யுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நீதிமன்றச் செயற்பாடும் ஆரம்பம்

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நீதிமன்ற நடவக்கைகளை, இன்று முதல் ஆரம்பிக்குமாறு நீதிச் சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றம், சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம், வர்த்தக நீதிமன்றம், மாவட்ட, நீதிவான் நீதிமன்றங்கள், தொழில் நீதிமன்றங்களை உள்ளடக்கும் வகையில் இந்த சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

சசிகா லேணர்ஸ்



முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.

தலைமை காரியாலயம்,
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

THE SASIKA LEARNERS
DS NO - 882

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

கிளை நிறுவனங்கள் –

வேலணை
வங்களாவடிச் சந்தி,
வேலணை
021 221 5472
070 301 3012

காரைநகர்
021 225 2454
070 510 2484

கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.
021 224 3393
070 301 3014

பண்டத்தரிப்பு
021 225 2333
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
070 301 3016

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி
021 226 0999
071 775 0999

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
021 221 5472
07 301 3012

# அடையாளம் காணப்படாத நிலையில் நோயாளர்கள் பலர் சமூகத்துக்குள்!

## ஹர்ஷா டி சில்வா எச்சரிக்கை



கொழும்பு,ஏப்.20

கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்படும் நபர்களை விட சமூகத்திற்குள் மேலும் பல நோயாளர்கள் அடையாளம் காணப்படாமல் இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் ஹர்ஷா டி சில்வா இதை தெரிவித் துள்ளார். கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே இதனை கூறியுள்ளார்.

ஒஸ்ரியாவில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளிகள் சமூகத்திற்குள் இருப்பது கண்டறியப் பட்டது.

உலக சுகாதார அமைப்பு இது சம்பந்தமான புள்ளி விவரங்களை வெளியிட்டுள்ளது.

இதனால், அடையாளம் காணப்படும் நோயாளி களை விட அதிகளவான நோயாளிகள் சமூகத்திற் குள் இருக்கக் கூடும் எனவும் ஹர்ஷா டி சில்வா குறி ப்பிட்டுள்ளார்.

இதேவேளை முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவும் இதே கருத்தை முன்வைத் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மருந்து உற்பத்திகளை அதிகரித்தது இலங்கை



இலங்கையில் கொவிட் 19 பரவலையடுத்து, மருந்து வகைகளின் உற்பத்தியை அதிகரித்துள்ளதாக, அரச மருந்தாக்க கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, பெரசிட்டமோல் மற்றும் சுகாவசக் கோளாறுகளுக்கு வழங்கப்படும் மருந்து வகை களை அதிகளவில் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், நீரிழிவு, குருதி அமுக்கம், கொலஸ்ட்ரோல் உள்ளிட்ட தொற்றா நோய்களுக்கான மருந்து வகைகளையும் அதிகளவில் உற்பத்தி செய்ய நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உள்நாட்டில் 20 சதவீதம் மருந்து வகைகள் உற்பத்தி செய்யப்பட்டு வரும் நிலையில், அதனை 60 – 75 சதவீதம் வரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ரயில் பயணிகளுக்கான கட்டுப்பாடு அறிவிப்பு

### மீறுவோர் திரும்பி அனுப்பப்படுவர்

கொழும்பு, ஏப்.20

ஊரடங்கு உத்தரவு இன்று தளர்த்தப்படும் போது ரயில் சேவைக்கான டிக்கெட் வழங்கும்போது சிறப்பு முறை பின்பற்றப்படும் என்று இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ரயில்வே திணைக்கள பொது முகா மையாளர் திலந்தா பெர்னாண்டோ தெரிவித்தவை வரு மாறு:–

ரயில்வே திணைக்களம் பல அலுவலக தொட ருந்து சேவைகளை இன்று மீண்டும் ஆரம்பிக்கின்றது. அத னால்பயணிகளுக்குச்சிறப்புவழிகாட்டுதல்கள்வழங்கப்பட் டுள்ளன.

ஒரு பெட்டியின் உள்ளே 50 பயணிகள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். அதே நேரத்தில் ரயில் நிலை யங்களுக்குள் செல்லும்போது மற் றும் தொடருந்துகளுக் குள் முகக்கவசம் (மாஸ்க்) பயன்படுத்துவது கட்டாய மாக்கப்பட்டுள்ளது.

ரயில் நிலையங்கள், பெட்டிகள் மற்றும் ரயில் தடங்க ளுக்குள் துப்புவது தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்த வழிகாட்டுதல்களை மீறும் பயணிகள் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும் என்று திணைக் களம் கண்டிப்பான அறிவுறுத் தலை வழங்குகின்றது – என்றார்.

ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்ட மாவட்டங்களில் கட்டுப் பாடுகளைப் பின்பற்றி பயணிகள் தொட ருந்து சேவை யைப் பயன்படுத்த முடியும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரயில் ரிக்கெட்டுகளை வாங்கும் கருமபீடத்தில் ஒரு மீற்றர் தூரத்தை பயணிகள் பின்பற்றவேண்டும்.

ரயில்களிலும், ரயில் நிலையங்களிலும் பிச்சை எடுப் பதும் வர்த்தகத்தில் ஈடுபடுவதும் தடை செய்யப்பட்டுள் ளது.

அத்தகைய விற்பனையாளர்களிடமிருந்து பொருள் களை வாங்கும் எந்தவொரு பயணியும் தொடருந்துக்குள் இருந்து வெளியேற்றப்படுவார் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

காய்ச்சல், இருமல் அல்லது சளி போன்றவற் றால் பாதிக்கப்பட்ட நபர்கள் தொடருந்துப் போக் குவரத்தை பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு ரயில்வே திணைக் களம் கேட்டுள்ளது.








# தினம் ஒரு தலைப்பு

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்

## சித்திரப்போட்டி



படம் 1



படம் 2

| படம் 1 | படம் 2 |
|---|---|
| மயூரன் தேனுகா - தரம் 10<br>யா/ வேலணை மத்திய கல்லூரி | அறிவுச்செல்வன் அறிவு ஆதித்தன் - தரம் 9<br>யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி |

இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றையசித்திரப் போட்டிக்கான தலைப்பு - 'தாமரைக் குளம்'

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'சைக்கிள் சவாரி' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர்.

தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாக தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

த. சம்யுக்தா - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

த. சுதந்திரா - தரம் 6
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

உ. ரோஷித் - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

மயூரன் யதுசன் - தரம் 6
யா/ வேலணை சரஸ்வதி வித்தியாலயம்

இ. கார்த்திகன் - தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

பா. தனுஷன் - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

பா. தனுபன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

ச. அஜீஸ் - தரம் 5
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

வி. சஞ்ஜனா - தரம் 3
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

பா. ஹரிஷ் - தரம் 4
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

பா. பிரியேஷ் - தரம் 1
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

கே. திகேசன் - தரம் 10
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

கே. தர்சன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

அறிவுச்செல்வன் அறிவுஅரங்கன் - தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

ஏ. எஸ். எவ். மனால் - தரம் 9
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எஸ். எவ். இஸ்ரத் - தரம் 11
பு/ அல் கிலால் மத்திய கல்லூரி

தி. கோவெழிலன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

லோ. நித்திலா - தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

அ. க. ரிஷாளன் - தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

தவேந்திரன் ஆஹர்ன் - தரம் 2
யா/ நெல்லியடி மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலை

கு. ஆதிகேசவன் - தரம் 10
யா/ ஹாட்லிக் கல்லூரி

செந்தூரன் அபிஷ்கன் - தரம் 4
யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி

கே. பிரிதிவிகரன் - தரம் 4
ஹட்டன் ஹைலாண்ட் கல்லூரி

சி. சிவகலை - தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

ஆதிரை அகிலன் - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

ஆயிழை அகிலன் - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

---

காலைக்கதிர் Kalaikathir

## தாமரைக் குளம்

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு



தினம் ஒரு தலைப்பு

## சித்திரப்போட்டி

**இன்று (20/04/2020) தலைப்பு தாமரைக் குளம்**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**

# வெளி மாவட்டங்களிலும் தமிழகத்திலும் சிக்குண்டுள்ள மட்டு. மாவட்டத்தவர்கள்

## தமிழ்க் கூட்டமைப்பு பல்வேறு நடவடிக்கைகள்

வெவ்வேறு காரணங்களுக்காக மட்டக்களப்பு மாவட்டத்தை விட்டு இலங்கையின் வேறு பாகங் களுக்கும், இந்தியாவின் தமிழ் நாட்டுக்கும் சென்ற பலர் திரும்பி வர முடியாமல் சிக்குப்பட் டுப் போயுள்ளார்கள். அவர்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல்வேறு நடவடிக் கைகளை மேற்கொண்டுள்ளது என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தை விட்டு இலங்கை யின் வேறு பாகங்களுக்கும், இந்தியாவின் தமிழ் நாட்டுக்கும் சென்று திரும்பி வரமுடியா மல் இருப்பவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்து கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கை யில் –

வெவ்வேறு காரணங்களுக்காக மட்டக்க ளப்பு மாவட்டத்தை விட்டு இலங்கையின் வேறு பாகங் களுக்கும், இந்தியாவின் தமிழ் நாட்டுக் கும் சென்ற பலர் திரும்பி வர முடியாமல் சிக்குப் பட்டுப் போயுள்ளனர். இலங்கையிலும், இந்தி யாவிலும் நடைமுறையிலுள்ள ஊரடங்குச் சட் டங்களும், கொரோனா தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகளுமே இதற்குக் காரணமாகும்.

இவ்வகையில், இவர்களை அவர்களின் சொந்த இடங்களுக்கு பாதுகாப்பாகத் திருப்பி அனுப்புவது தொடர்பில் எமது தரவுகளின் அடிப் படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ம.ஆ.சுமந்திரன் ஆகியோர் இறுதியாக நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பதிலளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கொழும்பில் இருந்து தொடர்பு கொண்டவர்கள் அவர்கள் தற்போது தங்கி நிற்கும் இடத்திற்கு அண்மையாகவுள்ள பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவுறுத் தப்பட்டனர்.

இதே போல் யாழ்ப்பாணம் அத்தியடி மற்றும் சுண்டிக்குழி ஆகிய இடங்களில் மறிபட்டுப் போயுள்ளவர்கள் அவர்கள் நிற்கும் பிரதேசங்க ளுக்குரிய பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டமையோடு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜாவும் இவர்களின் நலன் கள் தொடர்பாக அக்கறை எடுத்துள்ளார். மட்டக்களப்பின் முன்னாள் அரச அதிபர் மா.உத யகுமாரும் இது தொடர்பில் நடவடிக்கை எடுத் துள்ளார் எனட் செய்திகள் வெளிவந்துள்ளன.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில்



கொக்கிளாய், கொக்குத்தொடுவாய்ப் பிரதேசங்க ளுக்குக் கடற் தொழிலுக்குகாகச் சென்ற களு வன்கேணியைச் சேர்ந்த 110 பேருக்கும் மேற் குறித்தவாறு பிரதேச செயலகங்களில் பதிவு செய்வதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்ட தோடு அவர்களுக்கான நிவாரணம் வழங்கும் செயற்பாடும் என்னால் மேற்கொள்ளப்பட்டது.

இதே வேளை கிழக்குப் பல்கலைக்கழகத் தில் இருந்து தமிழ்நாட்டின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பின் பட்டப்படிப்பினை மேற்கொள்ளச் சென்ற மாணவர்கள் இலங்கை திரும்ப முடியாத நிலையில் சிதம்பரத்தில் மறி பட்டுப் போயுள்ளனர். இதேவேளை சமயவழி பாடு தொடர்பில் அரக்கோணம், இரும்புலியூர், பெந்தகொஸ்தே சபைக்குச் சென்றவர்களும் வரமுடியாத நிலையில் உள்ளார்கள்.

மேற்குறித்தவர்கள் தொடர்பில் என்னால் சென்னையிலுள்ள இந்தியாவுக்கான இலங்கை உதவித் தூதுவர் வி.கிருஷ்ணமூர்த்தியைத் தொடர்பு கொண்டு அவர்களுடைய நிலைமை பற்றி விவரித்த போது அவர் தனது மின்னஞ்சல் முகவரியை வழங்கி சம்மந்தப்பட்டவர்களைத் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டிருந்தார். இந்த விடயம் மேற்குறித்தவர்களுக்கு அறி விக்கப்பட்டு அவர்கள் அத்தொடர்பினை மேற் கொண்டுள்ளார்கள்.

உதவித் தூதரின் கருத்தின் பிரகாரம் மாண வர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என் றும், இந்திய – இலங்கை அரசுகளின் தொடர்பா டல் மற்றும் சுகாதாரப் பகுதியினரின் ஆலோ சனைகளின் அடிப்படையில் அவர்களை நாட் டுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் தெரிவிக்கப் பட்டது.

இதே நேரத்தில் இவ்விதம் தொழில் நிமித்தம் வெளி மாவட்டங்களுக்குச் சென்று மறிபட்டுப் போனவர்களின் குடும்பங்களினுடைய உதவி நிவாரணம் தொடர்பில் எமது மாவட்டப் பிரமுகர் கள் பலரும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். – என்று தெரிவித்தார்.

# வடக்கு சலூன்களுக்கான விசேட அறிவுறுத்தல்கள்

வடக்கிலுள்ள சிகை அலங்கரிப்பு நிலையங்களில் நாளை கடைப்பி டிக்க வேண்டிய நடை முறைகளை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல் லைத்தீவு, மன்னார், வவுனியா அரச அதிபர்களிற்கு, வடக்கு சுகாதார சேவைகள் பணிப் பாளர் வைத்தி யர் ஆ.கேதீஸ்வ ரன் அறிவித்துள் ளார்.

‘சிகை அலங்கரிப்பு நிலை யங்களுக்குரிய அறிவுறுத்தல் கள்’ என்ற தலைப்பிலான அந்த அறி விப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:–

நீண்ட நாள்களாக அமுலில் இருந்த ஊரடங்கு தளர்த்தப்பட உள் ளதால் பெரும் எண்ணிக்கை யா னோர் சிகை அலங்கரிப்பு நிலையங் களை (சலூன்களை) அணுகவுள்ள னர். இது ஒரு ஆபத் தான நிலையா கும்.

கொரோனா தொற்று ஆபத்துக் களை தவிர்ப்பதற்காக பின் வரும் நடைமுறைகளை அமுல்படுத்து மாறு தங்களது பிரதேச செயலர்கள் ஊடாக சிகை அலங் கரிப்பு நிலைய உரிமையாளர்க ளுக்கு அறிவுறுத்து மாறு தய வுடன் கேட்டுக்கொள்கின் றேன்.

**அறிவுறுத்தல்கள்:**

1. சலூன்களுக்குள் இருவருக் கிடையில் ஒருமீற்றர் சமூக இடை வெளியைப் பேணவும்.

2. முடிதிருத்துநர்கள் கட்டாய மாகமுகக் கவசம் அணிந்திருத்தல் வேண்டும்.

3. முடிதிருத்துநர்கள் ஒவ்வொரு வாடிக்கையாளருக்குமிடையில் கைகளை சரியான முறையில் ஓடும் நீரில் சவர்க்கா ரம் கொண்டு கழுவ வேண்டும்.

4. மொத்தமாக பணியில் உள்ள முடிதிருத்துநர்களின் எண்ணிக் கைக்கு ஏற்ப வாடிக்கையாளரை உள்ளே அனுமதிக்கவும். உதாரண மாக முடிதிருத்துநர்கள் இருவர் பணி யில் இருந்தால் முடி வெட்டிக் கொண் டிருப்பவர்கள் இருவரும் காத்திருப் பவர் இரு வரும் என நான்கு வாடிக் கையாளர்களை மட்டுமே உள்ளே அனுமதிக்கவும். கடையின் அளவு சிறிதாயின் காத்திருக்கும் வாடிக்கை யாளரின் எண்ணிக்கையை மேலும் குறையுங் கள்.

5. ஒவ்வொரு வாடிக்கையா ளருக்கும் பாவிக்கும் உபகரணங் கள் அனைத்தையும் ஸ்பிறிற் மூலம் அல்லது கொதிக்கும் நீரில் அமிழ்த்தி தொற்று நீக்கம் செய்யவும். தொற்று நீக்கம் செய்ய முடி யாத உபகரணங் களைப் பாவிப்பதை இயன்றவரை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

6. போர்வை, துவாய், பிளேட் போன்றவற்றை வழமைபோல் ஒரு வருக்கு ஒன்று எனப் பாவிக்கவும். பிளேட்டை ஒருவருக்குப் பாவித்த பின் எறியவும்.

துவாய்கள், போர்வைகளை தோய்த்து உலர்ந்தபின்பே பாவிக் கவும்.

இந்த அறிவுறுத்தல்களை தங் கள் மாவட்டத்தின் பிரதேச செயலர் கள் ஊடாக சகல சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்கும் அறிவிக்கு மாறுகேட்டுக் கொள் கின்றேன். – என்று உள்ளது.

# 17 வகையான உணவுப் பொருள்களுக்கு இறக்குமதித் தடை தொடர்ந்து நீடிக்கும்

அண்மையில் தடை விதிக்கப் பட்டிருந்த 17 வகையான உணவுப் பொருள்களின் இறக்குமதியை, இனியும் ஒருபோதும் இறக்குமதி செய்யப்போவதில்லை என்று அர சாங்கம் தீர்மானித்துள்ளதாக, விவசாயத்துறை அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டை – மெதமுலன, பல்பேமுலன விஹாரையில், நேற்று இடம்பெற்ற மரக்கன்று நடும் நிகழ் வில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், கொரோனா வைரஸ் தொற்று, தற் போது இந்நாட்டுக்கு ஓர் ஆசிர்வாத மாகியுள்ளது என்றும் இந்நாடு பின் னடையக் காரணமாகியிருந்த பல வற்றை நாம் இப்போது தவிர்க்கக் கிடைத்துள்ளவாய்ப்பாக இதுஅமைந் துள்ளது என்றும் தெரிவித்தார்.

இந்நாட்டில் உற்பத்தி செய்யக் கூடிய பயறு, கௌபி போன்ற தானி யங்களை, நாட்டுக்குத் தேவையான ளவில் உற்பத்தி செய்துகொள்ளவும் இனி அவற்றை வெளிநாடுகளிலி ருந்து இறக்குமதி செய்வதைத் தவிர்க்கவும், அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது என்றும் அவர் கூறி னார்.

இதேவேளை, வாகனங்கள், அதி சொகுசு உபகரணங்கள் என் பன, தொடர்ந்து வரும் 3 மாதக் காலப்பகுதிக்கு இறக்குமதி செய்யப் படுவதில்லை என்று, அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அந்த வகையில், வாகனங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், ஃப்ரீசர்ஸ் உள்ளிட்ட அதி சொகுசு உபகரணங் கள், மரக்கறிகள், பழங்கள், மிளகு போன்றவற்றின் இறக்குமதிகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.



20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

021 222 3536

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் விதி யாழ்ப்பாணம்.

நெல்லியடியில் – இல. 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி – இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.04.2020 இல் வெளியிடப்பெற்றது.